12.08.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## காவிரி டெல்டா பாசனம் விவசாயிகள் அதிக நம்பிக்கை

மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது காவிரி டெல்டா பகுதியில்,விவசாய தொழிலாளர் பணியை அடுத்த, 100 நாட்களுக்கு மும்முரப்படுத்தும்.

காவிரி நீர்ப்பாசன மாவட்டங்கள் பத்துக்கும் மேல் இருந்த போதும், கடந்த சில ஆண்டுகளாக, காவிரி நீரை குடிநீராக எதிர்பார்க்கும் நகரங்கள் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. சென்னைக்கு, ஆந்திராவின் கிருஷ்ணா தண்ணீர் தவிர, காவிரி நீர் வீராணம் வழியாக அதிக அளவு தேவைப்படுகிறது.தற்போது மேட்டூர் அணை நீர்மட்டம், 95 அடி உயரத்திற்கு அதிகமாக இருப்பதால், அரசு தண்ணீரைத் திறந்து விட்டிருக்கிறது.

ஆனாலும், குறுவை நெல் சாகுபடிக்கு வாய்ப்பு இல்லை என்ற மனநிலையை, டெல்டா விவசாயிகள் தங்கள் அனுபவத்தால், உணர்ந்து வருகின்றனர். மேட்டூர் அணை தண்ணீரை நம்பி, 16 லட்சம் ஹெக்டேர் பாசனப்பகுதியாக இருந்தாலும், இப்போது திறக்கப்பட்ட தண்ணீர் கடைமடைப் பகுதியான நாகை பகுதி வரை, போதுமான அளவு கடைசி வரை தொடருமா என்பதை, இன்று கூற முடியாது.

காவிரி தண்ணீர் டிரிபியூனல் ஒப்பந்தப்படி, அடுத்த இரு மாதங்களில், 40 டி.எம்.சி., தண்ணீர் நிச்சயமாக வரும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

கர்நாடகாவின் தட்சிண கர்நாடகா பகுதிகளில் நல்லமழை பெய்திருக்கிறது. அது தொடர்ந்து காவிரிப் பகுதியில் உள்ள அணைகளில் தண்ணீர் சேமிக்க முடியாமல் வழிந்தோட, வருண பகவான் அருள் தேவை. காவிரி டெல்டா பகுதியில், ஏற்கனவே பாசனக் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு வசதி உள்ள விவசாயிகள், நெல் நாற்று பயிரிட்டு காத்திருப்போருக்கு, இத்தண்ணீர் வருகை நம்பிக்கை தரும். நல்லவேளையாக, மின் தட்டுப்பாடு இல்லை.

மேலும், டெல்டா பகுதிகளில் சன்ன ரக அரிசி விளைவிக்க முழு வாய்ப்பு இருக்கிறதா, அதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக சந்தை விலை கிடைத்து லாபம் கிடைக்குமா என்ற யூகம், இப்போது சரிவராது. மோட்டா ரக நெல் பயிரிட்டு, 100 அல்லது 110 நாட்களில் விளைவித்து, லாபம் பார்த்தால், விவசாயிகளுக்கு மன நிறைவு ஓரளவு வரலாம்.தற்போது விதை நெல் மற்றும் பொட்டாஷ், யூரியா உட்பட ரசாயன உரங்கள், தாராளமாக இருக்கிறது என்று தமிழக அரசு அறிவித்து இருக்கிறது.

இனி, அடுத்து வரும் சில நாட்களில், மேட்டூரில் இருந்து வினாடிக்கு, 10 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்படும்போது, அது பாசனப் பகுதிகளுக்கு சென்றடையும். அதே சமயம், அந்த அளவுக்கு மேல் தண்ணீர் வரத்து இருந்தால், டெல்டா பாசனம் இத்தடவை

முற்றிலும் பிழைத்து விடும்.மேலும் காவிரி நீர், குடிநீருக்கும் பயன்படுத்தப் படுகிறது. அந்தக் கோணத்தில் பார்க்கும்போது, ஆகஸ்டில், 50 டி.எம்.சி., தண்ணீரை கர்நாடக அரசு முறையாக திறந்துவிடும் பட்சத்தில், நமக்கு தண்ணீர் வருகை குறித்த அச்சம் நீங்கும்.

மேலும், பாசனப் பகுதியில் விளைவிக்கப்படும் கரும்பு பயிர், அதிக அளவு தண்ணீர் தேவை கொண்டது. அதற்கு இப்போது சந்தையில் ஆதரவு குறைவதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கோவை வேளாண் பல்கலையும், மற்ற அரசு அமைப்புகளும், தற்போதைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பல்வேறு பயிர்களை விளைவிக்க தகுந்த ஆலோசனைகள் வழங்குகின்றன. அதை விவசாயிகள் பின்பற்றுவதுடன், பயிர்க்காப்பீட்டில் அனைத்து விவசாயிகளும் ஈடுபட்டு, அவற்றை முழுமையாக பின்பற்றுகின்றனரா என்பதை அரசுத்துறைகள் விரைவாக கண்காணித்தால் நல்லது.

**வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் 'சூரை' மீன் பாம்பனில் அமோகம்; மீனவர்கள் 'குஷி'**



ராமேஸ்வரம்;வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் 'சூரை' மீன்கள் பாம்பன் நாட்டுப்படகுகளின் வலையில் அதிகம் சிக்கியதால், மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.பாம்பனில் இருந்து 200 க்கும் அதிகமான நாட்டுப்படகுகளில் மீனவர்கள் மன்னார் வளைகுடா ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்றனர். நேற்று கரை திரும்பிய இவர்களது படகுகளில் 'டியூனா பிஸ்' எனப்படும் 'சூரை' மீன்கள் அதிகம் சிக்கி இருந்தன.

ருசி மிகுந்த இந்த மீன்களை ஆஸ்திரேலியா, கனடா, சிங்கப்பூர் மற்றும் வளைகுடா நாடுகளில் விரும்பி சாப்பிடப்படுவர். இந்த மீன்களை துாத்துக்குடியில் அவியல் செய்து, நன்றாக காய வைத்து கருவாடாக்கி கப்பலில் கனடா, ஆஸ்திரேலியாவுக்கு அனுப்புவதற்காக, வியாபாரிகள் ஒரு கிலோ 90 முதல் 100 ரூபாய்க்கு வாங்கிச் சென்றனர். இதனால், மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

பாம்பன் மீன் வியாபாரி ராஜா கூறுகையில்,“500 அடிக்கும் ஆழமான ஆழ்கடலில் வசிக்கக்கூடிய இந்த 'சூரை' மீன்கள் நாட்டுப்படகு, விசைப்படகுகளின் வலைகளில் சிக்குவது அரிது. இதற்கென உள்ள ஆழ்கடல் மீன்பிடி படகுகள் மூலமாக டன் கணக்கில் பிடிக்கப்படும்.

இம்மீன்களை கருவாடாக்கி, இடித்து மளிகை பொருள்கள் சேர்த்து புட்டு போல் சமைத்து சாப்பிட்டால் ருசியாக இருக்கும். தமிழகத்தில் இதை 'மாசி கருவாடு' என கூறுவர்,” என்றார்.

## இளநீர் வணிக வளாகத்தால் விவசாயிகளுக்கு... இனி எல்லாம் சுகமே ண இன்முகம் காட்டி அழைப்பு விடும் அதிகாரிகள்

பொள்ளாச்சி : 'இளநீர் வணிக வளாகத்தை பயன்படுத்தினால், ஏராளமான நன்மைகள் கிடைக்கும். பொள்ளாச்சியில், 3.25 கோடி

ரூபாயில் அமைக்கப்பட்டுள்ள வணிக வளாகத்தை, விவசாயிகள், வியாபாரிகள், முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்' என்று, வேளாண் துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பொள்ளாச்சி மற்றும் சுற்றுப் பகுதியில், தென்னை சாகுபடியே பிரதானமாக உள்ளது. இங்கு சாகுபடியாகும் தேங்காய், இளநீர் ஆகியவை, நாடு முழுவதும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. இடைத்தரகர்கள் ஆதிக்கத்தால், தென்னை விவசாயிகளுக்கு போதிய லாபம் இல்லாத சூழல் காணப்பட்டது. அந்த நிலையை மாற்றவும், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் நேரிடையாக வியாபாரம் செய்யவும், 'இளநீர் வணிக வளாகம் அமைக்க வேண்டும்' என கோரிக்கை எழுந்தது. அதன்படி, பொள்ளாச்சி அருகே திப்பம்பட்டியில், 3.25 ஏக்கரில், மூன்று கோடியே 25 லட்சம் ரூபாயில், இளநீர் வணிக வளாகம் அமைக்கப்பட்டது. கடந்த ஜூன் மாதம் வீடியோ கான்பரன்சிங் மூலமாக, இம்மையத்தை முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார். வணிக வளாகத்தில், 10 கடைகள், ஒரு பரிவர்த்தனை கூடம்; ஐந்து இடுபொருட்கள் மையம், ஒரு அலுவலக கட்டடம் அமைந்துள்ளது. இங்கு, 2 லட்சம் காய்கள் ஒரே நேரத்தில் விற்பனை செய்ய முடியும். மீன்கரை ரோட்டில், 3,000 மெட்ரிக் டன் வரை இருப்பு வைத்துக் கொள்ளலாம்.

இவ்வளவு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இம்மையத்தை முழுமையாக பயன்படுத்துவது குறித்து, விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியில், இப்போது அதிகாரிகள் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளனர்.வேளாண்மை உதவி இயக்குனர் (விளம்பரம்\மற்றும் பிரசாரம்) சாத்தப்பன் கூறியதாவது: விவசாயிகள் பயன்பாட்டிற்காக இளநீர் வணிக வளாக மையம், ஜூன்,

16ல் திறக்கப்பட்டது. இதன் மூலம் பல்வேறு நன்மைகளை தென்னை விவசாயிகள் பெற முடியும். இங்கு விவசாயிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வியாபாரிகள், ஒரே இடத்தில் தேவையான இளநீர் காய்களை கொள்முதல் செய்யலாம். நல்ல தரமான இளநீர் காய்களை ஏலம் மூலம் கொள்முதல் செய்யவும் வசதி செய்யப்பட்டுள்ளது. பார்வை முறையில் இளநீர் காய்களை தரம் பிரிப்பு செய்யப்படுகிறது. எனவே, இளநீர் வணிக வளாகத்தினை விவசாயிகள், வியாபாரிகள் பயன்படுதிக்கொள்ள வேண்டும்.
விவரங்களுக்கு வேளாண் வணிக வேளாண்மை அலுவலர் பல்கீஸ், வேளாண்மை அலுவலர் சுந்தரராஜன் இளநீர் வணிக வாக மேற்பார்வையாளர் கருப்பையா ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## பருத்திக்கும் சொட்டுநீர் பாசனம் கோவை மாவட்டத்தில் அறிமுகம்

கோவை மாவட்டத்தில், ஆறு ஒன்றியங்களில் முதன்முதலாக, மானியத்துடன் கூடிய சொட்டு நீர் பாசனத்தில், பருத்தி சாகுபடி துவங்குகிறது.
தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்பட்ட கோவையில், ஒரு காலத்தில் பஞ்சாலை தொழில் கொடிகட்டி பறந்தது. பெரும்பாலான பஞ்சாலைகள் முடங்கிய நிலையில், தற்போதும் பல இடங்களில் பஞ்சாலைகள் செயல்படுகின்றன. கோவை மாவட்டத்தில் அதிகமாக பருத்தி சாகுபடி செய்யப்பட்டதே இத்தொழில் முன்னேற முக்கிய காரணமாகும். எனினும் தற்போது, ஆனைமலை, பொள்ளாச்சி தெற்கு, வால்பாறை, மேட்டுப்பாளையம், காரமடை ஒன்றியங்களில் பருத்தி சாகுபடி இல்லை. இன்றைய நிலையில் கிணத்துக்கடவு, பொள்ளாச்சி

வடக்கு, மதுக்கரை, அன்னூர், எஸ்.எஸ்.குளம் உட்பட ஆறு ஒன்றியங்களில் மட்டும் பருத்தி அதிக பரப்பளவில் சாகுபடியாகிறது. இந்த ஆறு ஒன்றியங்களிலும், பருத்தி சாகுபடியை மேலும் பல எக்டர்களுக்கு அதிகரிக்க, தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக, குறிப்பிட்ட ஆறு ஒன்றியங்களிலும் சொட்டு நீர் பாசனத்தில் பருத்தி சாகுபடி திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. முதன் முதலாக சொட்டு நீர் பாசனத்தில் சாகுபடி துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், விவசாயிகளிடையே ஆர்வத்தை துாண்டும் வகையில் மானியமும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஒன்றியங்களிலும், 15க்கும் மேற்பட்ட எக்டர்களில் பருத்தி சாகுபடி அதிகரிக்கப்படுகிறது. குறிப்பாக பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில், 19 எக்டருக்கு பருத்தி சாகுபடி விரிவுபடுத்தப்படுகிறது. இதில், சிறு,குறு விவசாயிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, எக்டருக்கு சாகுபடி மானியமாக, 85 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதேபோல் பெரும் விவசாயிகளுக்கு எக்டருக்கு, 64 ஆயிரம் ரூபாய் மானியம் அளிக்கப்படுகிறது. பருத்தி நடவு, உயிர்உரமிடுதல், மருந்து தெளிப்பு, நுண்ணுாண்டம் வழங்கல், ஊடுபயிர் சாகுபடி, நுனி கிள்ளுதல், விதை சேகரித்தல் உள்ளிட்ட திட்டங்களும் பருத்தி சாகுபடியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தகவலை, பொள்ளாச்சி வடக்கு ஒன்றிய வேளாண் உதவி இயக்குனர் உமாராணி தெரிவித்தார்.

## சூரிய காந்தி பூக்களில்அழுகல் நோய்

வாலாஜாபாத்: சூரிய காந்தி பூக்களை, மண்டை அழுகல் நோய் தாக்கி வருவதால், விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். வாலாஜாபாத் ஒன்றியத்தில், கீழ்ஒட்டிவாக்கம்; வெங்குடி; தாங்கி;

வில்லிவலம் ஆகிய கிராமங்களில், எண்ணெய் வித்து பயிரான, சூரிய காந்தியை விவசாயிகள் பயிரிட்டுஉள்ளனர். தற்போது, சூரிய காந்தி, அறுவடைக்கு தயாராக பூத்து குலுங்கி உள்ளது. இந்நிலையில், தாங்கி அருகே, இப்பூக்களை மண்டை அழுகல் நோய் தாக்கி உள்ளது. இதனால், பூக்கள் அழுகி வருகின்றன. சூரிய காந்தி பயிரிட்டுள்ள தாங்கி கிராம விவசாயிகள் நஷ்டமடைந்து உள்ளனர். இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "பூக்கும் நேரத்தில் மழை பெய்தால், மண்டை அழுகல் நோய் ஏற்படும். இதை தவிர்க்க, பூ பூக்கும் நேரத்தில், டிஎம்.45 ரகம் 40 கிராம் மற்றும் பெவிக்சின், 20 கிராம் தேவையான அளவு தண்ணீரில் கலந்து, தெளிக்க வேண்டும்," என்றார்.

**அவலூர்பேட்டையில் இலவச கறவை மாடு பயனாளிகளுக்கு பயிற்சி முகாம்**

அவலூர்பேட்டை:அவலூர்பேட்டையில் இலவச கறவை மாடு பயனாளிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.மேல்மலையனூர் ஒன்றியம் பரையம்பட்டு, கடப்பனந்தல் கிராமங்களில் இலவச கறவை மாடு வழங்குவதற்கு 100 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு, அவலூர்பேட்டை கால்நடை மருந்தகத்தில் பயிற்சி முகாம் நடந்தது.திண்டிவனம் கோட்ட கால்நடை துறை பராமரிப்பு உதவி இயக்குனர் டாக்டர் மகேந்திரன் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். விழுப்புரம் கால் நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர் டாக்டர் வெங் கடபதி கலந்து கொண்டு, கறவை மாடு கொள்முதல் செய்தல், பராமரித்தல், நோய்களிலிருந்து காத்தல், சிகிச்சை அளித்தல் குறித்து விளக்கினார்.

இதில் டாக்டர்கள் ராஜேந்திரன், மோகன், ராஜன், ஊராட்சி தலைவர்கள் அமாவாசை, அங்கம்மாள் ராமச்சந்திரன், அ.தி. மு.க., கிளை செயலாளர் பாக்கியராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கரும்பு நிலுவை தொகை வழங்க காலக்கெடு: தனியார் ஆலைகளுக்கு கலெக்டர் உத்தரவு

விழுப்புரம்:கரும்பு விவசாயிகள் குறைகளை களைவதற்கு கரும்பு ஆலை நிறுவனங்களோடு முத்தரப்பு கூட்டம், விழுப்புரத்தில் நடந்தது.விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்கு கலெக்டர் லட்சுமி தலைமை தாங்கினார். விக்கிரவாண்டி எம்.எல்.ஏ., ராமமூர்த்தி, வேளாண்மை இணை இயக்குனர் ரத்தினசபாபதி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஆறுமுகம், வேளாண் துணை இயக்குநர் இளவரசன், முன்னோடி வங்கி மேலாளர் ராஜேந்திரன் மற்றும் விவசாய பிரதிநிதிகள், கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

செம்மேடு, முண்டியம்பாக்கம் ராஜ்ஸ்ரீ, தரணி, களையநல்லூர், மெட்ராஸ் சுகர்ஸ், ஈ.ஐ.டி.பாரி, செங்கல்வராயன் சக்கரை ஆலைகளின் அதிகாரிகள் பங்கேற்றனர்.

தரணி ஆலைக்கு உட்பட்ட விவசாயிகள் கரும்பு பயிருக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் தேசியமயமாக்கபட்ட வங்கிகளில் திருப்பி செலுத்த வேண்டிய விவசாயிகள் வாங்கிய பயிர்கடனை வட்டியோடு சேர்த்து இந்த மாத இறுதிக்குள் செலுத்துவதாகவும், ஆதாய விலையை வரும் செப்டம்பருக்குள் வழங்குவதாக ஆலை தரப்பில் உறுதியளித்தனர்.

ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் அதே காலகெடுவிற்குள் பணத்தை வழங்குவதாக தெரிவித்தனர். செங்கல்வராயன் ஆலை நிலுவை தொகையை அரசிடம் இருந்து வழிவகை மூலம் கடன் கோரியுள்ளதாகவும், கிடைத்தவு டன்

விவசாயிகளுக்கு மாநில அரசு பரிந்துரை விலை இம்மாத இறுதிக் குள் வழங்கவதாக உறுதியளித்தனர்.

தொடர்ந்து கலெக்டர் லட்சுமி கூறியதாவது :கரும்பு ஆலை நிர்வாகம் நிலுவை தொகை ஏதுமில்லாமல் வரும் செப்டம்பர் மாதத்திற்குள் வழங்க வேண்டும். மாவட்டத்தில் உள்ள நான்கு தனியார் சக்கரை ஆலைக ளும் கடந்த 2013-14ம் ஆண்டு வெட்டப் பட்ட கரும்பிற்கு மாநில அரசு பரிந் துரை விலையை டிசம்பருக்குள் வழங்க வேண்டும். நிர்ணயிக்கப் பட்ட காலத்திற்குள் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்ய வேண்டும். இவ்வாறு கலெக்டர் லட்சுமி பேசினார்.

## சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில்மதிப்பு கூட்டிய உணவு பொருள் விற்பனை

பனமரத்துப்பட்டி,:சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடந்த கருத்தரங்கில், வாழை பழத்தை உலர வைத்து தயாரிக்கப்பட்ட எட்டுக்கும் மேற்பட்ட உணவு பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது.சேலம், சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், முன் பருவ சம்பா சாகுபடி தொழில்நுட்ப விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. இதில், தேசிய தோட்டக்கலை வாரியம், தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர்கள் கம்பெனி சார்பில், ஸ்டால் அமைக்கப்பட்டிருந்தது.வாழை பழத்தில் இருந்து, மதிப்பு கூட்டப்பட்டு தயாரிக்கப்பட்ட சாக்லெட், முந்திரி, பாதாம் கலந்த உலர் வாழை பழம், ஜூஸ், பவுடர், ஜாம், வாழை பூ தொக்கு, மா, ஆரஞ்சு, சப்போட்டா, நெல்லி, அன்னாச்சி, பலா, பப்பாளி, தக்காளி உள்ளிட்டவை உலர வைக்கப்பட்டு, பதப்படுத்தி விற்பனைக்கு வைக்கப்பட்டது.வாழை உற்பத்தியாளர்கள் கம்பெனி இயக்குனர் சுப்ரமணி கூறியதாவது:சூரிய ஒளி கதிர் மூலம் பழங்கள் உலர வைத்து,

பதப்படுத்தப்படுகிறது. வாழை பழங்கள், கொமிக்கல் இல்லாமல், குளிர்பதன கிடங்கு மூலம் சீராக பழுக்க வைக்கப்படுகிறது.இந்த உலர வைக்கப்பட்ட பழங்கள், ஆறு மாதம் முதல், ஒராண்டு வரையில் கொடாமல் இருக்கும். இம்முறையில், கருவேப்பிலை, வெண்டைகாய், கொத்தமல்லி உள்ளிட்டவைகளும் பதப்படுத்தப்படுகிறது.இவ்வாறு, அவர் கூறினார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்இருநாளில் ஒரு அடி சரிவு

மேட்டூர், :நீர்வரத்தை விட, வெளியேற்றம் கூடுதலாக இருப்பதால், மேட்டூர் அணை நீர்மட்டம், கடந்த இரு நாட்களில் ஒரு அடி சரிந்தது.மேட்டூர் அணை நீர்மட்டம் கடந்த, 9ம் தேதி, 96.510 அடியாகவும், நீர் இருப்பு, 60.411 டி.எம்.சி.,யாகவும் இருந்த நிலையில், டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 13,000 கனஅடி நீர்திறக்கப்பட்டது. அதேநேரம் காவிரி நீர்பிடிப்பு பகுதியில் நீடிக்கும் வறட்சியால் நேற்று முன்தினம், 1,673 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று, 1,149 கனஅடியாக சரிந்தது. அணை நீர்வரத்தை விட, வெளியேற்றம் கூடுதலாக இருப்பதால் நேற்று மேட்டூர் அணை நீர்மட்டம், 95.350 அடியாகவும், நீர் இருப்பு, 58.981 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது.

கடந்த, இரு நாளில் மேட்டூர் அணை நீர்மட்டம், ஒரு அடியும், நீர் இருப்பு, 1.5 டி.எம்.சி.,யும் சரிந்துள்ளது குறிப்பிட்டத்தக்கது.

## ரூ. 95 லட்சத்திற்கு மஞ்சள் வர்த்தகம்

ராசிபுரம்:நாமகிரிப்பேட்டையில், வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த மஞ்சள் ஏலத்தில், 95 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள்

வர்த்தகம் நடந்தது.நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில், மஞ்சள் ஏலம், நேற்று நடந்தது. தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், மஞ்சளை அறுவடை செய்து ஏலத்திற்கு கொண்டு வந்தனர்.இதில், தலா, 65 கிலோ கொண்ட 2,300 மூட்டை, ஏலத்திற்கு வந்தது. விரலி ரகம், மூட்டைக்கு அதிகபட்சமாக, 9,009 ரூபாய், குறைந்தபட்சமாக, 7,869 ரூபாய், உருண்டை ரகம் மூட்டைக்கு அதிகபட்சமாக, 7,319 ரூபாய், குறைந்தபட்சமாக, 5,509 ரூபாய் ஏலம் போனது.அதேபோல், பனங்காலி ரகம் மூட்டைக்கு, 16 ஆயிரத்து, 569 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 8,412 ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று ஒரே நாளில் மொத்தம், 95 லட்சம் ரூபாய்க்கு, மஞ்சள் வர்த்தகம் நடந்தது.

## தக்காளியை அழிக்கும் புதிய வகைபூச்சிகளால் விவசாயிகள் கவலை

ஓசூர்:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 10 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. ராயக்கோட்டை, ஓசூர், பேரிகை, பாகலூர், தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம் மற்றும் சூளகிரி பகுதியில் விவசாயிகள் ஆண்டு முழுவதும் தக்காளி சாகுபடி செய்து வருகின்றனர்.இங்கு உற்பத்தியாகும் தக்காளி கர்நாடகா, ஆந்திரா, கேரளா மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு விற்பனைக்கு செல்கிறது. தக்காளி விலை தற்போது வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், புதிய வகை பூச்சி தாக்குதல் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைவர் வடிவேல்

கூறியதாவது:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தக்காளி விவசாயிகளை கவலை கொள்ளும் வகையில், தக்காளி நுண் துளை காய் புழு தாக்குதல் அதிகரித்துள்ளது. சவுத் அமெரிக்கன் பின் வார்ம் எனப்படும் இந்த பூச்சிகள், பெரு நாட்டில் தான் முதல் முதலில் கண்டறியப்பட்டது. பின்னர் அமெரிக்கா, ஆப்ரிக்கா மற்றும் ஆசியாவில் வேகமாக பரவியது. இந்த பூச்சிகள் வேகமாக பரவுவதோடு, தக்காளி ரகங்களை முற்றிலும் அளிக்கும் தன்மை கொண்டது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் குஜராத் வழியாக பூனேவில் ஊடுருவியது. பின்னர் படிப்படியாக ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழகத்தில் பரவியது. இவற்றை ஒழிக்க, தேசிய பீரோ ஆஃப் அக்ரிகல்சர் இன்ஸ்செக்ட் ரிசோர்ஸ் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.தமிழகத்தில் தொடர் நடவடிக்கை காரணமாக, இப்பூச்சிகள் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பூச்சிகள் இலை, பூ, காய் என, பரவி தக்காளி இனத்தையே முற்றிலும் அளிக்கும் திறன் கொண்டது. ஆண் பூச்சிகளை அழித்து பூச்சிகள் இனப்பெருக்கத்தை தடுப்பது. ஆரம்ப நிலையில் உரிய மருந்துகளை தெளிப்பது போன்ற நடவடிக்கையால், இந்திய அளவில் தற்போது உள்ள சேதாரம், 10 சதவீத அளவில் இருந்து, 6 மாதத்திற்குள், 1 சதவீத அளவிற்கு குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## ரூ.40 லட்சம் மதிப்பில்பருத்தி விற்பனை

சத்தியமங்கலம்,:சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில், 40 லட்சம் ரூபாய்க்கு பருத்தி விற்பனை நடந்தது.சத்தியமங்கலம், கோபி ரோட்டில், சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை

சங்கம் உள்ளது. இச்சங்கத்தின் சார்பில் வாழை மற்றும் பருத்தி ஏலம் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வாராமும், திங்கள் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் வாழை ஏலமும், செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் பருத்தி ஏலமும் நடக்கிறது.கடந்த சில வாரங்களாக, பருத்தி விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்று நடத்த ஏலத்தில், சராசரியாக, ஒரு கிலோ பருத்தி, 38 முதல், 42.60 ரூபாய் வரை மட்டுமே விற்பனையானது.மொத்தம், 1.50 லட்சம் குவிண்டால் பருத்தி, 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

## ஹெக்டருக்கு 10 டன் மகசூல்மக்காச் சோளம் சாகுபடிக்கு பயிற்சி

பெரம்பலூர்,:மக்காச் சோளத்தில் ஹெக்டருக்கு, 10 டன் மகசூல் எடுக்கும் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள, 110 விவசாயிகளுக்கான பயிற்சி, பெரம்பலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் நடந்தது.பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது, பயிற்சியை துவக்கி வைத்து பேசியதாவது:பெரம்பலூர் மாவட்டம், மக்காச்சோளம் உற்பத்தியில், மாநில அளவில் முதலிடத்தில் உள்ளது. மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகள், தற்போதைய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி, ஒரு ஹெக்டருக்கு, 10 டன் மகசூல் எடுக்கலாம். அதற்கான வழிமுறைகளை, வேளாண்மைத்துறை அலுவலர்கள் உங்களுக்கு வழங்குவர். நிலத்தின் மண் மாதிரி ஆய்வு செய்து, நிலத்தின் தன்மை, மண்ணுக்கு தேவைப்படும் சத்துக்கள் குறித்தும் அறிந்து கொண்டு, அதற்கு ஏற்ப உரங்களை இட வேண்டும்.இவ்வாறு, அவர் பேசினார். வேளாண்மை துணை இயக்குனர் ஆறுமுகம், விவசாயிகளுக்கு மண் பரிசோதனை பற்றியும், வேளாண்மை உதவி இயக்குனர் கீதா, மண் மாதிரி எடுத்தல், ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்தல் பற்றியும்,

பெரம்பலூர் வட்டார வேளாண்மை அலுவலர்கள் ரமேஷ், மாயவேல் ஆகியோர் தொழில் நுட்பங்கள்பற்றி விரிவாக எடுத்துக் கூறினர்.

## கேரள வியாபாரிகள் வராததால் வெறிச்சோடிய மாட்டுச்சந்தை

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் சந்தைக்கு கேரள வியாபாரிகள் வராததால், விவசாயிகள் மாடுகளை கொண்டுவரவில்லை. இதனால் சந்தை வெறிச்சோடி காணப்பட்டது.தமிழக, கேரள மாட்டு வியாபாரிகள், லாரிகளில் மாடுகளை ஏற்றிச் செல்ல அனுமதி அளிக்க வேண்டும் என்று கூறி கடந்த ஜூலை 19 முதல் போராடி வருகின்றனர். அன்று முதல் இங்குள்ள சந்தைகளில் மாடுகள் வாங்குவதை தவிர்த்து விட்டனர். வாரந்தோறும் திங்களன்று கூடும் ஒட்டன்சத்திரம் நகராட்சி மாட்டுச் சந்தையில் 2 ஆயிரம் மாடுகள் வரை விற்பனை செய்யப்படும்.

கடந்த வாரம் 100 மாடுகள் மட்டுமே வந்திருந்தன. இதனால் வளர்ப்பு மாடுகளை விற்பதற்கு கொண்டு வந்த விவசாயிகள், விற்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

கேரள விவசாயிகள் வராத நிலையில், வாரந்தோறும் மாடுகளை விற்க முடியாமல் விவசாயிகள் திரும்பி சென்றதால், நேற்று கூடிய சந்தையில் மாடுகள் கொண்டு வரப்படவில்லை. இதனால் மாட்டுச் சந்தை வெறிச்சோடிக் காணப்பட்டது. மாட்டுச் சந்தை செயல்படாததால் இதனை நம்பி பிழைப்பை நடத்தி வந்த நூற்றுக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## வறட்சியால் இயற்கை தீவனங்களுக்கு...தட்டுப்பாடு: பாதிப்புக்குள்ளாகும் கால்நடை வளர்ப்போர்

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டி பகுதியில் நிலவும் வறட்சியால் இயற்கை தீவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கூடுதல் விலை கொடுத்து செயற்கை தீவனங்கள் வாங்க வேண்டி இருப்பதால் கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். விவசாயம் சார்ந்துள்ள ஆண்டிபட்டி பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் மானாவாரி மற்றும் இறவைப்பாசனம் உள்ளது. விவசாயத்துடன் இப்பகுதி விவசாயிகள் கால்நடை வளர்ப்பில் பால் மாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவாய் ஈட்டி வருகின்றனர். மழைக்காலங்களில் விளையும் தானிய, பயறு வகை பயிர்கள் அறுவடைக்கு பிறகு கால்நடை தீவனத்திற்கு பயன்படுத்தப்படும். சில விவசாயிகள் வெளியூர்களில் இருந்து வைக்கோல், சோள தட்டைகளை விலைக்கு வாங்கி, இருப்பில் வைத்து தட்டுப்பாடு ஏற்படும் போது பயன்படுத்துவர்.

இந்த ஆண்டு காடையில் தீவனத்திற்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில் ஏப்ரம், மே மாதங்களில் ஆண்டிபட்டி பகுதியில் கோடை மழை பெய்தது. இதனால் விளைந்த இயற்கை தீவனம் விவசாயிகளுக்கு கை கொடுத்தது. கடந்த இரண்டு மாதங்களாக வாட்டி வதைக்கும் வெயில், தொடரும் பலமான வறண்ட காற்று இவற்றால் ஆண்டிபட்டி பகுதியில் மீண்டும் வறட்சி தலைதூக்கி உள்ளது. இதனால் கால்நடைகளுக்கு தேவையான இயற்கை தீவனங்களுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

செயற்கை தீவனங்கள் விலை பல மடங்கு உயர்ந்து விட்டது. விவசாயிகளிடம் குறைவான அளவு இருப்பில் இருந்த தீவனங்களும் தீர்ந்துவிட்டது. இதனால் கால்நடை வளர்ப்பவர்கள் தற்போது தீவனத்திற்காக திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. தென்மேற்கு பருவ மழைக்கான சூழல் தற்போது ஆண்டிபட்டி பகுதியில் இல்லை. இதனால் இயற்கை தீவனம் கிடைப்பதில்லை.

கால்நடை வளர்ப்பவர்கள் கூடுதல் செலவு செய்து செயற்கை தீவனங்களை வாங்கி கால்நடைகளை பராமரிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கால்நடைகளால் வரும் வருவாயை விட வளர்ப்பதற்கான செலவுத்தொகை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**சம்பா நடவுக்கு விதை நெல், இடுபொருட்கள்...தயார்:உற்பத்தியை அதிகரிக்க வேளாண் துறை ஆயத்தம்**



கடலூர்:மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட உள்ளதால், கடலூர் மாவட்டத்தில் சம்பா பருவத்திற்குத் தேவையான விதை நெல், இடுபொருட்கள் மற்றும் ரசாயன உரங்கள் போதிய அளவிற்கு இருப்பு வைக்க வேளாண் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

விவசாயமே பிரதான தொழிலாகக் கொண்ட கடலூர் மாவட்டத்தில், 2 லட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் உள்ளன. மாவட்டத்தின் டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறந்து விடப்படும்.

ஆனால், இந்த ஆண்டு அணையில் போதிய தண்ணீர் இல்லாததால் ஜூன் 12ல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடவில்லை.

இதனால், டெல்டா பாசன பகுதிகளில் குறுவை சாகுபடி பாதித்தது.

தென்மேற்கு பருவமழை காரணமாக, அணையில் நீர் மட்டம் அதிகரித்தது. அதனைத் தொடர்ந்து முதல்வர் உத்தரவின் பேரில் 58 நாட்கள் தாமதமாக, கடந்த 9ம் தேதி மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக விநாடிக்கு 13 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

அதனையொட்டி நாளை (13ம் தேதி) கல்லணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்த விடப்பட உள்ளது. இதனால், கடலூர் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து, சம்பா நடவிற்கு நிலங்களை தயார் படுத்த ஆயத்தமாகி வருகின்றனர்.

கல்லணை வழியாக கீழணைக்கு வரும் தண்ணீர் செப்டம்பர் முதல் வாரத்தில், வீராணம் ஏரி வழியாக பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட

வாய்ப்பு உள்ளதால், இந்தாண்டு மாவட்டத்தில் கூடுதல் மகசூல் பெற வேளாண் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மாவட்டத்தில் டெல்டா பாசன பகுதியில் ஒரு லட்சத்து 33 ஆயிரம் ஏக்கர் நிலம் இருந்தாலும், மேட்டூர் அணை தாமதமாக திறக்கப்பட்டுள்ளதால், ஆழ்குழாய் கிணறு வசதி உள்ளவர்கள் மட்டுமே நாற்று விட்டுள்ளனர். பிற விவசாயிகள் தண்ணீர் வந்த பிறகு நேரடி நெல் விதைப்பு முறையில் பயிரிட முடிவு செய்துள்ளனர்.

மாவட்ட விவசாயிகள், சம்பா நடவிற்கு ஆயத்தமாகி வருவதைத் தொடர்ந்து அவர்களுக்கு தேவையான விதை நெல், இடுபொருட்கள், நுண்ணுயிர் உரம் மற்றும் ரசாயன உரங்கள், விவசாயிகளுக்கு தடையின்றி கிடைக்க போதிய அளவிற்கு இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்சம்பா பருவத்திற்கான வெள்ளைப் பொன்னி, சாவித்திரி, பி.ப்பி.டி.5204 ரக விதை நெல்களும், மத்திய கால ரகமான ஏ.டி.ட்டி-39, ஏ.டி.ட்டி.38, ஏ.எஸ்.டி.19 ரக நெல் மாவட்ட விவசாயிகள் அதிகம் பயிரிடுவர்.

அதனையொட்டி பழைய ரகங்களான பி.ஆர்-1009, பி.ப்பி.டி -5204, வெள்ளைப் பொன்னி, ஏ.டி.ட்டி-39, ஏ.டி.ட்டி-43, கோ-39, கோ-43 விதைகளும், புதிய ரகங்களான கோ-49, கோ-50, சொர்ணா சப்-1, என்.எல்.ஆர்-34449 விதைகள் வேளாண் விரிவாக்க மையங்கள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் 800 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், தனியார் விற்பனையாளர்களிடமும் போதிய அளவு விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம் போன்ற உயிர் உரங்கள் 2 லட்சம் பாக்கெட்களும், நெல்லுக்கு பயன்படுத்தும்

நுண்ணுரம் 15 டன், பயிறு வகைகளுக்கான நுண்ணுரம் 6 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும், ரசாயன உரங்களான யூரியா 4,000 டன், சூப்பர் பாஸ்பேட் 500 டன், காம்ப்ளக்ஸ் 3,147 டன், பொட்டாஷ் 1267 டன், டி.ஏ.பி. 1310 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

**கடலூரில் வெளிமாநில மீன்கள் விற்பனை அமோகம் : கடலில் மீனவர்கள் வலையில் மீன்பாடு குறைவு**




கடலூர்:கடலில் மீன் வரத்து குறைந்ததால் வெளி மாநில மீன்கள் கடலூரில் அமோகமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் வளர்ப்பு மீன்களுக்கு கிராக்கி அதிகரித்துள்ளது.கடலில் மீன் வளம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. அதனால் மீன்கள் இனப்பெருக்க காலமான கோடை மாதங்களில் கட்டாயமாக கடலில் மீனவர்கள் மீன்பிடிப்பதை அரசே தடைவிதித்துள்ளது. இந்த 40 நாட்கள் மீன்பிடி தடை காலத்தால் நல்ல பலன் கிடைத்துள்ளது.இதே போன்று அண்டை மாநிலங்களிலும் அங்குள்ள சீதோஷ்ண நிலையை உணர்ந்து மீன்பிடி தடை காலத்தை கடைபிடித்து வருகின்றனர். தமிழகத்தில் மீன்பிடி

தடைகாலம் முடிந்த பின்னர் சில வாரங்கள் நல்ல மீன்பாடு இருந்தது.அதன்பின்னர் படிப்படியாக மீன்கள் கிடைப்பது குறைந்து வருகிறது. பெரிய அளவிலான இயந்திர படகில் கடலில் மீன்பிடிக்க சென்று வரும் அத்தியாவசிய செலவுதொகைக்கு கூட மீன்கள் கிடைப்பதில்லை. இதனால் கடலில் சென்று மீன் பிடிப்பதையே மீனவர்கள் குறைத்து வருகின்றனர்.நம் முன்னோர்கள் காலம்காலமாக அதிகளவில் உணவுக்காக பயன்படுத்தி வந்த சில வகை மீன்கள் மிக குறைவான அளவிலயே கிடைக்கின்றன. இன்னும் சில வகை மீன்கள் கிடைப்பது அரிதாக உள்ளது.கோலா, காணாங்கழுத்தி, பொறிவா, சீராய் நண்டுகள் போன்றவையெல்லாம் அரிதாக கிடைத்து வருகின்றன. இதனால் மார்க்கெட்டில் உள்ளூர் மீன்களுக்கு பதில் வெளி மாநில மீன்கள் தான் அதிகளவில் வியாபாரம் நடக்கிறது.சங்கரா, கவலை, இறால், வவ்வாள் போன்ற மீன்கள் மங்களூர், ஆந்திரா, கேரளா மாநிலங்களில் இருந்து வரவழைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. கடலோரப்பகுதியில் வசித்து வந்தாலும் புதியதாக பிடித்து வரப்பட்ட மீன்களை மக்களால் வாங்கி பயன்படுத்த முடியவில்லை. வெளி மாநிலங்களில் கிடைக்கும் மீன்கள் பல வாரம் ஐஸ் பாக்சில் பதப்படுத்தி வைத்திருக்கும் மீன்களைத்தான் வாங்கி பயன்படுத்தி வருகின்றனர்.இதனால் இங்குள்ள கடலில் கிடைக்கும் ஓரிரு வகை மீன்களுக்கு நல்ல கிராயிக்கி இருப்பதால் தேடிப்படித்து வாங்கிசெல்லும் நிலை உள்ளது. அதே நேரத்தில் கடல் உணவு உண்ணும் அசைவ பிரியர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.தேவை அதிகரிக்கும் வேளையில் பற்றாக்குறையும் அதிகரித்துள்ளது. இதனால் கிலோ 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட சங்கரா மீன் 250 ரூபாயாக உயர்ந்துள்ளது. கிலோ 150க்கு விற்பனை செய்யப்பட்ட வளர்ப்பு நண்டுகள் கிலோ 500 ரூபாயாக

உயர்ந்துள்ளது. கடலில் கிடைக்கும் மீன்களில் சிறந்த மீனாக கருதப்படும் வவ்வா மீன் குளத்தில் வளர்க்கப்பட்டு கிலோ 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**திடீர் மழையால் மக்கள் மகிழ்ச்சி**

புதுச்சேரி:புதுச்சேரியில் நேற்றிரவு மழை பெய்ததால், மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

நேற்று மாலை 6.00 மணியளவில் வானத்தில், கருமேகங்கள் சூழ்ந்து, குளிர்காற்று வீசியது. தொடர்ந்து, 7.00 மணியளவில் திடீர் மழை பெய்தது.வெப்பத்தின் தாக்கம் ஓரளவு குறைந்ததால், மக் கள் மகிழ்ச்சியடைந்தனர். பாகூர், திருபுவனை, நெட்டப்பாக்கம், திருக் கனுார் பகுதியில் லேசான மழை பெய்தது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வெள்ளாடு வளர்ப்புக்கு இன்று முதல் இலவச பயிற்சி**

திண்டுக்கல் கனரா வங்கியின் ஊரக சுயவேலை வாய்ப்பு நிலையம் சார்பில், வெள்ளாடு மற்றும் கோழி வளர்ப்புக்கான இலவச பயிற்சி வகுப்புகள் புதன்கிழமை(ஆக.12) முதல் நடைபெறுகிறது. பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் 8ஆம் வகுப்பு படித்தவராகவும், வயது வரம்பு 18 முதல் 45-க்குள்பட்டவராகவும் இருக்க வேண்டும். இப்பயிற்சி முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. பயிற்சியில் சேர்வதற்கான

விண்ணப்பத்துடன், குடும்ப அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ் நகல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ 3 ஆகியவற்றை இணைத்து வழங்க வேண்டும். 0451-2434034, 94426-28434, 99408-35147 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திருச்சுழி அருகே மண் பரிசோதனை முகாம்**

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி அருகே மண்பரிசோதனை முகாம் நடைபெற்றது.

அருப்புக்கோட்டை தேவாங்கர் கலைக்கல்லூரி வேதியியல் துறையும், நடமாடும் மண் பரிசோதனை நிலையமும் இணைந்து மடத்துப்பட்டி கிராமத்தில் மண் பரிசோதனை முகாம் நடத்தியது. முகாமை கல்லூரி முதல்வர் டாக்டர் ரவிக்குமார் தொடங்கி வைத்தார். நடமாடும் மண் பரிசோதனை நிலையத்தின் முதுநிலை வேளாண்மை அலுவலர் சுந்தரவள்ளி, வேளாண்மை அலுவலர்கள் கோகிலா, ராமசாமி ஆகியோர் விவசாயிகளுக்கு மண்ணிலுள்ள குறைபாடுகளை விரிவாக எடுத்துரைத்தனர்.

**ஆகஸ்ட் 19-இல் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்**

திருப்பூர் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் ஆக்ஸ்ட் 19-ஆம் தேதி திருப்பூரில் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து திருப்பூர் ஆட்சியர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருப்பூர் கோட்டத்தில் அமைந்துள்ள திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, பல்லடம், ஊத்துக்குளி, அவிநாசி வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கான குறைதீர்க் கூட்டம் ஆகஸ்ட் 19-ஆம் தேதி, காலை 11 மணிக்கு, திருப்பூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் முருகேஷன் தலைமையில் நடைபெறவுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 85.68 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 85.68 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 604 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 415 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 18.99 டி.எம்.சி.

**இயந்திர நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியம்**

இயந்திர நடவு செய்யும் விவசாயிகளுக்கு எக்டருக்கு ரூ. 3 ஆயிரம் மானியம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பற்று வைக்கப்படும் என்று ஆரணி வட்டார தொழில்நுட்ப மேலாளர் சதீஷ்குமார் தெரிவித்தார்.

மேலும் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

ஆரணி வட்டாரத்தில் 2015-16 ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த உணவு தானிய உற்பத்தித் திட்டம், நெல் கீழ் இயந்திர நடவு முறையை பிரபலப்படுத்துதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு பாய் நாற்றங்காலம், தட்டில் நாற்றங்கால் அமைக்க வேண்டும். விவசாயிகள் சொந்தமாகவோ,

வேளாண் பொறியியல் துறை மூலமாகவோ இயந்திர நடவு மேற்கொள்ள வேண்டும்.

இயந்திர நடவு மேற்கொள்ளும்போது விவசாயிகளைச் சேர்த்து புகைப்படம் எடுத்து தேதியுடன் விண்ணப்பிக்க வேண்டும். நடவு முடிந்த 15 நாள்களுக்குள் வேளாண்மைத் துறை அலுவலர்கள் சரிபார்த்து சான்றிதழ் வழங்கிய பின் அதிகபட்சமாக ஹெக்டேருக்கு ரூ. 3ஆயிரம் மானியமாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக பற்று வைக்கப்படும்.

ஒரு விவசாயிக்கு 2 ஹெக்டேர் வீதம் அனுமதி உண்டு. இந்தத் திட்டத்தின்கீழ் பயனடைய விரும்பும் விவசாயிகள் அந்தந்த பகுதி உதவி வேளாண்மை அலுவலர்கள், ஆரணி வேளாண்மை விரிவாக்க மைய அலுவலர்களை அணுகலாம் என்று கூறினார்.

**நாட்டுக்கோழி குஞ்சுகள் பராமரிப்புக்கு இலவசப் பயிற்சி**

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நாட்டுக்கோழி குஞ்சுகளின் இறப்பைக் கட்டுப்படுத்துதல், பராமரிப்பு முறைகள் குறித்த ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் வரும் 18-ஆம் தேதி நடைபெறுகிறது.

பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இதுகுறித்து பயிற்சி முகாமில் நாட்டுக்கோழி ரகங்கள், குஞ்சு பொரிக்கும் முறை, குஞ்சு பொரிப்பான்களின் பயன்கள், வளர்ப்பு முறைகள், தீவன அளவுகள் குறித்த பயிற்சி நடத்தப்பட உள்ளது. மேலும், இந்தப் பயிற்சியில் நாட்டுக்கோழி குஞ்சுகளைத் தாக்கும் பல்வேறு நோய்கள், அதன் அறிகுறிகள், அவற்றைத் தடுக்கும் முறைகள் குறித்தும் விரிவாக

எடுத்துரைக்கப்படும். இதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள், ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம்.

விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது 04286-266345 என்ற தொலைபேசி மூலமாகவோ வரும் 17-ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளவேண்டும். பயிற்சிக்கு வரும் விவசாயிகள் தங்களுடைய ஆதார் எண்ணை கண்டிப்பாகப் பதிவு செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முட்டை விலை**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.42, சென்னையில் ரூ.3.50.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக்குழு செவ்வாய்க் கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.65, முட்டைக்கோழி கிலோ ரூ.63.

**பெரம்பலூரில் விவசாயிகளுக்கு மக்காச்சோள சாகுபடி பயிற்சி**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பயிற்சி வகுப்பைத் தொடக்கி வைத்து ஆட்சியர் தரேஸ் அஹமது பேசியது:பெரம்பலூர் வட்டாரத்தில் சுமார் 6,000 ஹெக்டேர் பரப்பளவில் மக்காசோளம் பயிரிடப்பட்டுள்ளது. மக்காச்சோளத்தில்தேசிய உணவு

பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் "ஹெக்டேருக்கு 10 டன் மகசூல்' எடுப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்துக்கு பெரம்பலூர் வட்டாரத்தில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ள 110 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.விவசாயிகள் தற்போதைய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி 1 ஹெக்டேருக்கு 10 டன் மகசூல் பெறலாம் என்றார் அவர்.பயிற்சியில், மண் மாதிரிகள் எடுப்பதன் முக்கியத்துவம், ஆய்வுப்படி உரமிடுதல், ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது

வேளாண்மை துணை இயக்குநர் எஸ். ஆறுமுகம் விவசாயிகளுக்கு மண் பரிசோதனை குறித்தும், வேளாண்மை உதவி இயக்குநர் அ. கீதா மண் மாதிரி எடுத்தல், ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்தல் குறித்தும், வட்டார வேளாண்மை அலுவலர்கள் க. ரமேஷ், மாயவேல் தொழில்நுட்பங்கள் குறித்தும் பயிற்சி அளித்தனர்.

**நீடாமங்கலத்திலிருந்து வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு 1,318 டன் யூரியா**

நீடாமங்கலத்திலிருந்து தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களைச் சேர்ந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு 1,318 டன் கிரிப்கோ யூரியா உரம் லாரிகள் மூலம் செவ்வாய்க்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து சரக்கு ரயில் மூலம் 1,318 டன் கிரிப்கோ யூரியா மூட்டைகள் நீடாமங்கலம் வந்தது. இந்த யூரியா மூட்டைகள் சரக்கு ரயிலிலிருந்து 75 லாரிகளில் ஏற்றப்பட்டு, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் உள்ள 75 தொடக்க வேளாண்மை

கூட்டுறவு சங்கங்களுக்கு கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேந்திரபிரசாத் மேற்பார்வையில் அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த யூரியா உரம் சம்பா சாகுபடிக்கு விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி கிடைக்க தமிழக அரசால் வரவழைக்கப்பட்டுள்ளது.

**கரும்பு விவசாயிகளுக்கு பரிந்துரை விலையை டிசம்பர் 15-க்குள் வழங்க ஆட்சியர் உத்தரவு**

விழுப்புரம் மாவட்டத்தில் செயல்படும் தனியார் சரக்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு மாநில அரசின் பரிந்துரை விலையை வரும் டிசம்பர் 2015-க்குள் வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் எம்.லட்சுமி தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கரும்பு விவசாயிகளின் குறைகளை களைவதற்கான முத்தரப்புக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் எம்.லட்சுமி தலைமை தாங்கினார். கூட்டத்தில் முண்டியம்பாக்கம் ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை, செம்மேடு ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை, களையநல்லூர் தரணி சர்க்கரை ஆலை, வேங்கூர் மெட்ராஜ் சுகர்ஸ், ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலை, செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகிய ஆலை நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் கரும்பு விவசாயிகள் தங்களுக்கு மாநில அரசின் பரிந்துரை விலையை வழங்காமல் கரும்புக்கு நிலுவைத் தொகை

வைத்துள்ளதாகவும், அதனை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

ஆனால் முதலில் ஆலை நிர்வாகத்தினர் அதனை வழங்க மறுத்தனர். இதனைத் தொடர்ந்து கூட்டத்தில் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது.

பின்னர் ஆலை நிர்வாகத்தினர் கரும்பு நிலுவைத் தொகையை வழங்க ஒப்புக் கொண்டனர். அதன்படி சில ஆலைகள் ஆகஸ்ட் 15ஆம் தேதிக்குள்ளும், சில ஆலைகள் செப்டம்பர் 15ஆம் தேதிக்குள்ளும் நிலுவைத் தொகையை வழங்குவதாக உறுதி அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆட்சியர் எம்.லட்சுமி பேசியதாவது: சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வரும் செப்டம்பர் 2015-க்குள் வழங்க வேண்டும். மேலும் மாநில அரசின் பரிந்துரை விலையை வரும் டிசம்பர் 2015-க்குள் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். கூட்டத்தில் விக்கிரவாண்டி ராமமூர்த்தி எம்.எல்.ஏ., வேளாண்மை இணை இயக்குநர் ரத்தினசபாபதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஆறுமுகம், வேளாண்மை துணை இயக்குநர் மு.இளவரசன், முன்னோடி வங்கி மேலாளர் ராஜேந்திரன், அரசு துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், ஆலை நிர்வாகத்தினர் என 200 பேர் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு ரூ.80 லட்சத்தில் தென்னை பராமரிப்பு உரம்**

கடலூர் வட்டத்தில், தென்னை விவசாயிகளுக்கு ரூ.79.72 லட்சம் மதிப்பீட்டில் உரங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

கடலூர் மாவட்டத்தில் கடந்த 2011-ம் ஆண்டு வீசிய தானே புயலால் பெருமளவில் தென்னை, முந்திரி, பலா, மா உள்ளிட்ட மரங்கள் விழுந்தன. இதனையடுத்து தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்

கீழ் தானே புயலால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு தானே மறுவாழ்வு சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.

கீழே விழுந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்த மரம் ஒன்றுக்கு ரூ.500-ம், அதே இடத்தில் மறு நடவு செய்ய விலையில்லா தென்னங் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டன.

கடலூர் வட்டத்தில் 1675 விவசாயிகளுக்கு 79,725 தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக தென்னங் கன்றுகளின் பராமரிப்புக்காக உரங்களும் வழங்கப்பட்டு வருகிறது.

4-ம் ஆண்டாக தென்னை ஒன்றுக்கு ரூ.100 மதிப்பில் உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள், ரசாயன உரங்கள் வழங்கும் நிகழ்ச்சி கரைமேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை செய்தியாளர்களுடன் கள ஆய்வுப் பயணமாகச் சென்ற ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் தொடங்கி வைத்தார்.

கடலூர் வட்டத்திலுள்ள 79,725 தென்னைகளுக்கு தலா ரூ.100 மதிப்பில் யூரியா, சூப்பர்பாஸ்பேட், பொட்டாஷ், அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, தென்னை நுண்ணூட்டக் கலவை வழங்கப்படுகிறது.

தென்னங் கன்றுகளுக்கு உரம் வைக்க இதுவே சிறந்த தருணம் என்பதால் அனைத்து விவசாயிகளும் பேரூட்டச்சத்து, நுண்ணூட்டச் சத்து, உயிர் உரங்களை ஒருங்கிணைத்து இட்டு பயன்பெற வேண்டும் என்று ஆட்சியர் கேட்டுக்கொண்டார்.

அப்போது, திட்ட அலுவலர் மகேந்திரன், கடலூர் வேளாண்மை உதவி இயக்குநர் பொ.ஜெயக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

**விவசாயிகளுக்கு பல்கலை. மாணவிகள் பயிற்சி**

கடலூர் அருகே உள்ள அத்திப்பட்டு கிராம விவசாயிகளுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் கல்லூரி இறுதி ஆண்டு மாணவிகள் பயிற்சி அளித்தனர்.

கிராமத்தில் தங்கி வேளாண் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ், வரக்கால்பட்டு, அத்திப்பட்டு கிராமங்களில் தங்கி வேளாண் பயிற்சிகளை அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவிகள் மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், அத்திப்பட்டு கிராமத்தில் விவசாயிகளுக்கு உதவிப் பேராசிரியர் ஜெயா தலைமையிலான மாணவிகள் பாரம்பரிய நெல் ரகங்களான வாடன் சம்பா, நீலஞ்சம்பா, நம்மாழ்வார் குறுவை, கிச்சலிச் சம்பா, பிச்சாவரி மற்றும் பல ரகங்கள் குறித்தும், நடவு இயந்திரங்கள், இயற்கை விவசாய முறைகள் குறித்தும் செயல்முறை மூலம் விளக்கமளித்தனர்.

வரக்கால்பட்டில் நடைபெற்ற நெல் திருவிழாவில் மாவட்ட ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் பங்கேற்று, வேளாண் மாணவிகளுக்கு ஆலோசனைகளை வழங்கிப் பாராட்டினார்.

**கோடை நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி முகாம்**

காலாப்பட்டு பண்ணை தகவல் மற்றும் விவசாயிகள் ஆலோசனை மையம் சார்பில் மணிலா பயிரிடும் விவசாயிகளுக்கான புதிய தொழில்நுட்பங்களை பற்றிய பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

கோடை நிலக்கடலை சாகுபடியில் மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் பயிற்சி முகாம் ஆறு வளர்ச்சி பருவங்களில் நடைபெறும். இதில் நிலக்கடலை சாகுபடியில் ஈடுபட்டு முன்னோடி விவசாயி சுப்பிரமணியன் தனது ஆலோசனைகள் மற்றும் நிலக்கடலை சாகுபடியில் பின்பற்ற வேண்டிய வழி முறைகளை குறித்து விவரித்தார்.

காலாப்பட்டு உழவர் உதவியாக வேளாண் அலுவலர் டி.அனுப்குமார் வரவேற்றார். பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் துறை முனைவர் விஜயகுமார், மணிலாவில் உள்ள பூச்சிகளை எவ்வாறு கட்டுபடுத்துவது, புருடோனியா புழு தாக்குதலை இயற்கை முறையில் எவ்வாறு கட்டுப்படுத்துவது என விவரித்தார்.

வேளாண் அறிவியல் நிலைய உழவியல் துறை முனைவர் ரவி ஒருங்கிணைந்த உர நிர்வாகம் மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள், போரான் சத்துக் குறைபாடுகள் பற்றி விளக்கினார்.

சஞ்சீவி நகர் கிராமத்தை சேர்ந்த 30-க்கும் மேற்பட்ட நிலக்கடலை விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஆ.ஆதித்தன் நன்றி கூறினார்.

## கொப்பரைக்கு ஆதரவு விலையை கிலோவுக்கு ரூ.125 ஆக உயர்த்த வேண்டும் மத்திய அரசுக்கு தென்னை சாகுபடியாளர்கள் கோரிக்கை



கோவை

கொப்பரைக்கு வழங்கப்படும் ஆதரவு விலையை ரூ.125 ஆக உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு தென்னை சாகுபடியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பேட்டி

இது தொடர்பாக தென்னிந்திய தென்னை சாகுபடியாளர்கள் சங்க தலைவர் டி.ஏ.கிருஷ்ணசாமி, செயலாளர் ஆர்.ஏ.சக்திவேல் ஆகியோர் கோவையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது:–

தேங்காய் விலை முன்பு இருந்ததை விட சரிவை சந்தித்துள்ளது. இதற்கு தேங்காய் எண்ணெய்யில் செய்யப்படும் கலப்படமே முக்கிய காரணம். பாம் கெர்னல் ஆயில் எனப்படும் பாமாயில் கழிவில் இருந்து தயாரிக்கப்படும் எண்ணெய்யை வெளிநாடுகளில் இருந்து தனியார் சிலர்

இறக்குமதி செய்து தேங்காய் எண்ணெய்யுடன் கலப்படம் செய்து விற்பனை செய்கின்றனர்.

முன்பு ஆட்சியில் இருந்த பாரதீய ஜனதா அரசு பாம் கெர்னல் ஆயில் இறக்குமதிக்கு 100 சதவீதம் இறக்குமதி வரி விதித்தது. அதற்கு பிறகு வந்த காங்கிரஸ் அரசு அதை ரத்து செய்து விட்டது. இதனால் எவ்வித தடையுமில்லாமல் வெளிநாடுகளில் இருந்து கலப்பட பாம் கெர்னல் ஆயில் இறக்குமதி செய்யப்படுகிறது.

<u>தடை செய்ய வேண்டும்</u>

இது தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்தப்படுவதாக கூறி இறக்குமதி செய்து தேங்காய் எண்ணெய்யில் கலப்படம் செய்வதால் தேங்காய் எண்ணெய் விலை வீழ்ச்சி அடைகிறது. இதன் எதிரொலியாக தேங்காயும், கொப்பரையின் விலையும் குறைகிறது. தேங்காய் எண்ணெய் விலை குறைவது ஒருபுறம் இருந்தாலும், கலப்பட தேங்காய் எண்ணெய்யை வாங்கிப் பயன்படுத்தும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படு கின்றனர். கேரளாவில் இதன் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த விவகாரத்தில் மத்திய அரசு கலப்பட எண்ணெய் இறக்குமதிக்கு 100 சதவீதம் வரி விதிக்க வேண்டும். அல்லது அதன் இறக்குமதியை தடை செய்ய வேண்டும்.

கொப்பரைக்கு தற்போது மத்திய அரசு வழங்கி வரும் ஆதரவு விலை கிலோவுக்கு ரூ.53 என்று இருப்பதை ரூ.125–ஆக உயர்த்த வேண்டும். பட்டுபோன தென்னை மரங்களை அப்புறப்படுத்தி விட்:டு புதிய தென்னங் கன்றுகளை வைப்பதற்கும், இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட தென்னைக்கு பதில் புதிய கன்றுகளை வளர்ப்பதற்கும் 2015–16–ஆம் நிதியாண்டில் தென்னை வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட ரூ.151 கோடியில் தமிழகத்துக்கு ரூ.9 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் கேரளாவுக்கு ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டது. செயல்முறை விளக்க பண்ணை திட்டத்தின் கீழ் பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். புதிதாக தென்னை விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு ஒரு ஹெக்டேருக்கு வழங்கப்படும் ரூ.4000 மானியத்தை ரூ.25,000–ஆக உயர்த்தி வழங்க வேண்டும்.

<u>மத்திய மந்திரிகளுடன் சந்திப்பு</u>

தென்னை விவசாயம் குறித்து தமிழகத்தில் உரிய கணக்கெடுப்பு நடத்த வேண்டும். தென்னையில் மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிக்க தொழில்நுட்ப உதவிகளை இலவசமாக வழங்க வேண்டும். மத்திய தென்னை நல வாரியத்தின் பிரதான அலுவலகம் கொச்சியில் உள்ளது. மண்டல அலுவலகம் சென்னையில் உள்ளது. சென்னையில் உள்ள அலுவலகத்தை கோவைக்கு மாற்ற வேண்டும். தென்னை விவசாயிகள் கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கு தமிழகத்தில் ஊக்கம் அளிப்பதில்லை. அது மட்டுமல்லாமல் அதிக கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. அதை குறைக்க வேண்டும்.

இதனால் கேரளாவில் 6 ஆயிரம் தென்னை விவசாய கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. தமிழகத்தில் 300 சங்கங்கள் தான் உள்ளன. இதை அதிகரிக்க மத்திய அரசு ஊக்கம் அளிக்க வேண்டும். மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக நாங்கள் டெல்லி சென்று பாராளுமன்ற துணை சபாநாயகர் தம்பித்துரை மற்றும் அ.தி.மு.க. எம்.பி.க்கள் மூலம் மத்திய விவசாய மந்திரி ராதா மோகன்சிங், வர்த்தக துறை மந்திரி நிர்மலா சீதாராமன், உணவுத் துறை மந்திரி ராம்விலாஸ் பஸ்வான் ஆகியோரை சந்தித்து மனு கொடுத்தோம். அவர்கள் ஆவன செய்வதாக கூறினார்கள்

இவ்வாறு அவர்கள் கூறினார்கள். அப்போது மாநில ஒருங்கிணைப்பாளர் செல்லத்துரை, உறுப்பினர் பத்மநாபன் ஆகியோர் உடன் இருந்தனர்.

**வீராணம் ஏரிக்கு 250 கனஅடி நீர்வரத்து**



காட்டுமன்னார்கோவில்,

வீராணம் ஏரிக்கு 250 கன அடிநீர் வந்தது.

வீராணம் ஏரி

காட்டுமன்னார்கோவில் அருகே லால்பேட்டையில் அமைந்துள்ளது வீராணம் ஏரி. இந்த ஏரி இப்பகுதி மக்களின் நீர் ஆதாரமாக உள்ளது. இந்த ஏரியின் மொத்த நீர்மட்டம் 47.50 அடியாகும். சாதாரண காலங்களில் வடவாற்றிலிருந்தும், மழைக்காலங்களில் நீர்பிடிப்பு பகுதியில் பெய்யும் மழைநீர், செங்கால் ஓடை, கருவாட்டு ஓடை, பெண்ணாங்குழி ஆகிய பகுதிகளில் இருந்தும் தண்ணீர் வரும். இதனால் 1 லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாசன வசதிகள் பெறும். மேலும், சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காகவும்


விநாடிக்கு 74 கன அடி நீர் அனுப்பப்படுகிறது. இந்தாண்டில், 2 முறை முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

விநாடிக்கு 250 கன அடி நீர்

மேலும், சென்னைக்கு குடிநீர் அனுப்புவதாலும், வெயில் வாட்டி வதைப்பதாலும் ஏரியின் நீர்மட்டம் 43.45 அடியாக குறைந்தது. இந்த நிலையில், கடந்த மாதம் ஆடிப்பெருக்கிற்காக கல்லணையில் இருந்து கீழணைக்கு 500 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதையடுத்து கீழணை முழு கொள்ளளவான 9 அடியை எட்டியதால் கீழணையில் இருந்து வீராணம் ஏரிக்கு விநாடிக்கு 250 கனஅடி நீர் திறக்கப்பட்டது. மேலும், கீழணையில் 2 அடி நீர் தற்காலிகமாக இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனால் தற்போது ஏரியின் நீர்மட்டம் 43.50 ஆக உயர்ந்துள்ளது. சென்னைக்கு விநாடிக்கு 70 கனஅடி நீர் அனுப்பப்படுகிறது. வீராணம் ஏரியில் 42 அடி நீர் இருந்தால் மட்டுமே சென்னைக்கு குடிநீர் அனுப்பப்படும். மேலும், சம்பா சாகுபடிக்கு தண்ணீர் தட்டுப்பாடின்றி கிடைக்குமா என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**கோழிகளின் எண்ணிக்கை 5 கோடியில் இருந்து இறங்கியது முட்டை ஏற்றுமதி அதிகரிப்பால் பண்ணையாளர்கள் ஆறுதல்**



நாமக்கல்லில் உள்ள குடோன் ஒன்றில் முட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டு இருப்பதை படத்தில் காணலாம்.

நாமக்கல் மண்டலத்தில் ஏறத்தாழ 4 ஆண்டுகளுக்கு பிறகு, கோழிகளின் எண்ணிக்கை 5 கோடியில் இருந்து இறங்கி உள்ளது. அதேசமயம் முட்டை ஏற்றுமதி அதிகரித்து இருப்பதால் பண்ணையாளர்கள் ஆறுதல் அடைந்து உள்ளனர். 5 கோடியை தொட்டதுநாமக்கல் மண்டலத்தில் 1,100-க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கிருந்து தற்போது நாள்ஒன்றுக்கு ஏறத்தாழ 3¼ கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இவற்றில் ஏறத்தாழ 90 லட்சம் முட்டைகள் கேரளாவிற்கும், 50 லட்சம் முட்டைகள் தமிழக அரசின் சத்துணவு திட்டத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. வெளிநாடுகளுக்கு 10 லட்சம் முட்டைகள் வரையிலும்,இதர முட்டைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு சில்லரை விற்பனைக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்த மண்டலத்தில் கோழிப்பண்ணை தொழில் கடந்த 10 ஆண்டுகளாக கடுமையாக வளர்ச்சியை கண்டு வந்தது. குறிப்பாக கடந்த 2005-ம் ஆண்டு 2½ கோடியாக இருந்த முட்டையின கோழிகளின் எண்ணிக்கை, 2011-ம் ஆண்டு இரட்டிப்பு ஆனது. 2011-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதன் முதலாக நாமக்கல் மண்டலத்தில் முட்டையின கோழிகளின் எண்ணிக்கை 5 கோடியை தொட்டது. அதன்பின்னர் 2012-ம் ஆண்டு

டிசம்பர் மாதம் அது 6 கோடியை நெருங்கியது. இறங்குமுகம் ஆனால் அதனை தொடர்ந்து கோழிப்பண்ணை தொழிலில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக முட்டையின கோழிகளின் எண்ணிக்கையும் குறைய தொடங்கியது. படிப்படியாக குறைந்து வந்த கோழிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 4 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் 5 கோடிக்கு கீழ் சென்று உள்ளது. தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையில், கடந்த ஜூலை மாதம் நாமக்கல் மண்டலத்தில் 4 கோடியே 96 லட்சம் முட்டையின கோழிகள் மட்டுமே இருந்தன.

இந்த வீழ்ச்சிக்கு மூலப் பொருட்களின் விலை உயர்வு, கூலி ஆட்கள் பற்றாக்குறை, ஏற்றுமதி பாதிப்பு போன்றவை முக்கிய காரணம் என பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். தொடர்ந்து நஷ்டத்தை சந்தித்து வந்த கோழிப்பண்ணையாளர்கள் குஞ்சுகள் விடுவதை குறைத்து கொண்டனர். இதுவே கோழிகளின் எண்ணிக்கை குறைய முக்கிய காரணம் என தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவினர் தெரிவித்தனர்.

ஏற்றுமதி அதிகரிப்பு அதேசமயம் முட்டையின் விலை உள்ளூரில் குறைந்து வருவதால், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி சற்று அதிகரித்து இருப்பது பண்ணையாளர்களுக்கு ஆறுதல் தரும் விஷயமாக இருந்து வருகிறது.

இது தொடர்பாக தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தின் படி, கடந்த ஜூன் மாதம் நாமக்கல் மண்டலத்தில் சராசரியாக 1 கோடியே 3 லட்சம் முட்டைகள் மட்டுமே ஏற்றுமதியாகி இருந்தது. அது கடந்த மாதம் (ஜூலை) 2 கோடியே 88 லட்சமாக உயர்ந்து உள்ளது.

**விற்பனை செய்யப்படும் விதைகளுக்கு ரசீது வழங்காவிட்டால் நடவடிக்கை துணை இயக்குனர் எச்சரிக்கை**




விற்பனை செய்யப்படும் விதைகளுக்கு ரசீது வழங்காவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விதை ஆய்வு துணை இயக்குனர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.சம்பா சாகுபடிதஞ்சை மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் மனோகரன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகள் தற்போது சம்பா பருவ நெல் பயிரிட விவசாயிகள் ஆயத்தமாகி வருகிறார்கள். எனவே விதை விற்பனையாளர்கள் விதைச்சட்ட நெறிமுறைகளை முறையாக

கடைபிடிக்க வேண்டும்.விற்பனையாளர்கள் விதை விற்பனை உரிமத்தை விற்பனை நிலையத்தில் தெளிவாக பார்வையில் தெரியும்படி வைக்க வேண்டும். விற்பனையை எந்த இடத்தில் செய்வதாக உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த இடத்தில் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். விற்பனை செய்யப்படும் விதைகளுக்கு ரசீது கண்டிப்பாக வழங்க வேண்டும். காலாவதி விதைவிற்பனை ரசீதில் விவசாயி பெயர், முகவரி, பயிர், ரகம், நிலை, காலாவதி நாள், விலை விவரம் மற்றும் விவசாயி கையெழுத்து, விற்பனையாளர் கையெழுத்து கண்டிப்பாக இடம்பெற வேண்டும். விதை இருப்பு, விலைவிவர பட்டியல் பலகையில் எழுதி வைக்க வேண்டும். காலாவதி நாள் கடந்த விதைகளை கண்டிப்பாக விற்பனை செய்யக்கூடாது.வெளிமாநில விதைகளை விற்பனை செய்யும்போது படிவம் 11 கண்டிப்பாக வினியோகஸ்தரிடம் கேட்டு பராமரிக்க வேண்டும். விதை விற்பனை விவரம் உடனுக்குடன் பதிவு செய்து புத்தக இருப்பும் உண்மை இருப்பும் ஒத்துப்போக வேண்டும். ஒவ்வொரு மாதமும் 5-ந்தேதிக்குள் தேதிக்குள் தஞ்சை விதை ஆய்வு துணை இயக்குனருக்கு மாதாந்திர விதை இருப்பு விற்பனை குறித்த விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும். விதைகள் வெயில், ஈரம் படும்படியாகவோ உரம், பூச்சிமருந்து அருகிலோ இல்லாமல் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.புகார் தெரிவிக்கலாம்விதை ஆய்வாளர்கள் விதை விற்பனை நிலையத்தை ஆய்வுக்கு உட்படுத்துவதற்கும் விதை மாதிரிகள் எடுத்து பரிசோதனை நிலையத்திற்கு அனுப்புவதற்கும் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும். இந்த விதைச்சட்ட நெறிமுறைக¬ளை பின்பற்றாத விதை விற்பனையாளர்கள் மீது நீதிமன்ற வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இது தொடர்பான புகார்களை தஞ்சை விதை ஆய்வாளர் சிவக்குமார் 9842602975, கும்பகோணம் விதை ஆய்வாளர்

முகமதுபாரூக் 9443092411, தஞ்சை விதை ஆய்வு துணை இயக்குனர் 04362-267959 ஆகியவற்றுக்கு ஆதாரத்துடன் புகார் தெரிவிக்கலாம்.

இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

**மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட காவிரி நீர் திருச்சி முக்கொம்பு மேலணையை வந்தடைந்தது கல்லணையில் இருந்து டெல்டா பாச னத்திற்காக நாளை திறந்து விடப்படும்**



மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்ட காவிரி நீர் திருச்சி முக்கொம்பு மேலணையை வந்தடைந்தது. நாளை காலை கல்லணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது.

காவிரி நீர் திறப்பு

மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் காவிரி நீரின் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, கடலூர் ஆகிய 12 மாவட்டங்கள் பாசன வசதி பெறுகின்றன. காவிரி நீரை நம்பி இந்த மாவட்டங்களில் சுமார் 16 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு மேட்டூர் அணையில் போதுமான நீர் இருப்பு இல்லாததால் கடந்த ஜூன் 12-ந்தேதி தண்ணீர் திறந்து விடப்படவில்லை. இந்நிலையில் தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுபடி கடந்த

9-ந்தேதி மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. வினாடிக்கு 13 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது.

மலர் தூவி வரவேற்பு

மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்பட்ட காவிரி நீர் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் மாயனூர் கதவணைக்கு வந்து சேர்ந்தது. தண்ணீர் மாயனூர் கதவணையிலிருந்து அப்படியே காவிரியில் திறந்து விடப்பட்டது. தண்ணீர் கடைமடை வரை செல்ல வசதியாக மாயனூர் காவிரியிலிருந்து பிரிந்து செல்லும் கட்டளை மேட்டுவாய்க்கால், தென்கரை வாய்க்கால், கிருஷ்ணராயபுரம் வாய்க்கால் ஆகிய பாசன வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேட்டூரிலிருந்து மாயனூர் கதவணைக்கு வந்த காவிரி தண்ணீரை காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நலச்சங்க செயல்தலைவர் மகாதானபுரம் ராஜாராம், செயலாளர் காந்திபித்தன், துணை தலைவர் சுகுமார், துணை செயலாளர் மணிக்குட்டி அய்யர் மற்றும் பொதுமக்கள் சம்பா செழிக்க வேண்டி பூஜைகளை செய்து மலர்தூவி வழியனுப்பி வைத்தனர்.

முக்கொம்பு வந்தடைந்தது

மாயனூர் கதவணையில் வேகமாக சீறி பாய்ந்த காவிரி நீர் நேற்று மாலை 3 மணி அளவில் திருச்சி மாவட்ட எல்லையான பெட்டவாத்தலை வந்தடைந்தது. அங்கிருந்து நேற்று இரவு திருச்சி முக்கொம்பு மேலணையை அடைந்தது. நேற்று இரவு சுமார் 7500 கன அடி தண்ணீர் முக்கொம்பு வந்தது. நேரம் ஆக ஆக நீரின் அளவு அதிகரித்து 10 ஆயிரம்

கன அடியை தாண்டியது. அங்கு தேக்கி வைக்கப்பட்ட தண்ணீரை இன்று (புதன்கிழமை) காலை முக்கொம்பு மேலணையில் இருந்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் திறந்து விடுகிறார்கள்.

நாளை கல்லணை திறப்பு

முக்கொம்பில் இருந்து திறந்து விடப்படும் காவிரி நீர் திருச்சி நகர பகுதிகள் வழியாக இன்று இரவுக்குள் தஞ்சை மாவட்டம் கல்லணையை சென்றடையும். கல்லணையில் இருந்து நாளை (வியாழக்கிழமை) காலை டெல்டா பாசனத்திற்காக காவிரி நீரை திறந்து விட பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

விவசாயிகள் மகிழ்ச்சி

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை போதுமான அளவில் பெய்யவில்லை என்றாலும் கர்நாடக மாநிலத்தில் பெய்த பலத்த மழையின் காரணமாக அங்குள்ள அணைகள் நிரம்பி மேட்டூர் அணைக்கு தண்ணீர் வந்தது. இதன் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் 96 அடியை எட்டியது. மேட்டூர் அணையில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் காவிரி ஆற்றின் இரு கரைகளையும் தொட்டபடி செல்வது விவசாயிகளிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

**கால்நடைகளுக்கு தேவையான தாது உப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது**



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு மாநில திட்டக்குழு நில பயன்பாடு மற்றும் ஆராய்ச்சி வாரியம் சார்பில் விவசாயிகளுக்கான ஒருநாள் கருத்தரங்கு வேலூர் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கால்நடை ஆராய்ச்சி மையத்தில் நேற்று நடந்தது. மண்டல இணை இயக்குனர் ராஜசேகரன் தலைமை தாங்கினார். உதவி பேராசிரியர் மற்றும் தலைவர் சரஸ்வதி வரவேற்றார்.

கருத்தரங்கில் கால்நடை அபிவிருத்தி மற்றும் நில பராமரிப்பு துறை துணை இயக்குனர் செங்கோட்டையன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராமகிருஷ்ணன், கால்நடை மருத்துவமனை இணை இயக்குனர் மனோகரன், கால்நடை உதவி மருத்துவர் ஜெயஸ்ரீ, உதவி பேராசிரியர் சுகந்தி உள்பட பலர் கலந்து கொண்டு பேசினார்கள்.

கருத்தரங்கில் ஒருங்கிணைந்த மண்வள மேம்பாட்டு மூலம் பசுந்தீவனம் மற்றும் கால்நடை உற்பத்தி திறனை பெருக்குதல் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. மேலும் கால்நடைகளுக்கான தாது உப்புகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. இதில் உதவி பேராசிரியர்கள் ராஜேஷ்குமார், ராஜ்குமார் மற்றும் 50–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினகரன்

**பஞ்சு மற்றும் நூல் விலை ஏற்றத்தாழ்வு : நூல் விற்பனையை ஒரு வாரம் நிறுத்த முடிவு**




கோவை : நூல் விலையை சீராக்க ஒரு வாரம் நூல் விற்பனையை நிறுத்த தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கம் முடிவெடுத்துள்ளது. இதன்மூலம் ரூ.700 கோடி வர்த்தகம் முடங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம் (சிஸ்பா) தலைவர் வரதராஜன், துணைத்தலைவர் ஜெகதீஷ் சந்திரன், செயலாளர் ரங்கராஜன், பொருளாளர் வெங்கடேசன் ஆகியோர் கோவையில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: தென்னிந்திய நூற்பாலைகள் சங்கத்தில் தமிழகத்தில் உள்ள 400 நூற்பாலை உள்பட தென்னிந்தியாவில் உள்ள 500க்கு மேற்பட்ட நூற்பாலைகள் உறுப்பினர்களாக உள்ளன. கடந்த சில மாதங்களாக பஞ்சு மற்றும் நூல் விலை ஏற்றத்தாழ்வினால், நூல் வர்த்தகம் மந்தமாக உள்ளது. நூலை விற்க முடியாமல் தமிழக நூற்பாலைகள் பெரும் நெருக்கடியை சந்தித்து வருகிறது. இந்நிலையில், நூற்பாலை அதிபர்களிடையே நூல் விற்பனை போட்டியை உருவாக்கி நூல் வியாபாரிகள் நூல் விலையை குறைத்து கொள்முதல் செய்கின்றனர்.

எனவே, நூல் விலை சீரடைய செய்யும் வகையில் நூல் விற்பனையை

ஒரு வாரத்துக்கு நிறுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு ரூ.100 கோடி மதிப்பிலான வர்த்தகம் நடைபெறுகிறது. இந்த வேலை நிறுத்தத்தால் 7 நாளில் ரூ.700 கோடி மதிப்பிலான நூல் வர்த்தகம் முடங்கும். இதனால் நூலுக்கு கிராக்கி ஏற்பட்டு விலை சீரடைய வாய்ப்புள்ளது. மத்திய அரசு, இந்திய பருத்திக கழகம் மூலம் வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யும் பஞ்சை, நூற்பாலை அதிபர்களுக்கு கட்டுப்படியான விலையில் விற்பனை செய்ய வேண்டும். செயற்கை நூல் மீதான இறக்குமதி வரியை அறவே நீக்க வேண்டும். நூல் மற்றும் துணி ஏற்றுமதிக்கு 5 முதல் 7 சதவீதம் வரை ஊக்கத்தொகை அளிப்பது, தமிழகத்தில் சாய ஆலைகள் அமைப்பது, விற்பனை வரியை குறைக்கவும், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலம் வசூலிக்கப்படும் செஸ் வரியை நீக்குவது உள்ளிட்ட கோரிக்கைகளை மாநில அரசுக்கு வலியுறுத்தி ஒரு நாள் வேலை நிறுத்தம் நடத்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தேதி அனைத்து சங்கங்களுடன் ஆலோசித்த பின்னர் அறிவிக்கப்படும். இவ்வாறு தெரிவித்தனர்.

**நிரம்பும் நிலையில் ராமக்காள் ஏரி விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி, : தர்மபுரியில் தற்போது பெய்து வரும் கோடை மழையால் ராமக்காள் ஏரி நிரம்பும் நிலையில் உள்ளது. இந்த ஏரியை நம்பி அப்பகுதியில் விவசாய பணிகள் துரிதமாக நடந்து வருகிறது. தர்மபுரி - கிருஷ்ணகிரி சாலை மதிகோன்பாளையத்தில் ராமாக்காள் ஏரி உள்ளது. சுமார் 265 ஏக்கர் பரப்பளவில் கொண்ட இந்த ஏரியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் இருந்துகொண்டே இருக்கும். கடந்த சில மாதங்களுக்கு முன் ராமக்காள் ஏரி வறண்டது. இதனால் ஆடு, மாடு, மேய்ச்சல் நிலமாக மாறியது. இந்நிலையில், கடந்த மாதம் மற்றும் அவ்வவ்போது பெய்து வரும் மழையால் ராமக்காள் ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது.

இதனால், வறண்டு கிடந்த ராமக்காள் ஏரி, தற்போது நிரம்பும் நிலையில் உள்ளது. இந்த ஏரியை நம்பியுள்ள சுமார் 400 ஏக்கர் விவசாய நிலங்களில் சாகுபடி செய்யும் பணியில் விவசாயிகள் துரிதமாக ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், ராமக்கா ஏரிக்கு வரும் கால்வாய் பகுதிகள், ஆக்கிரமிப்பால் நீர் வரத்து குறைந்து காணப்பட்டது.

தற்போது பெய்து வரும் மழையால் ஏரியில் மழைநீர் தேங்கியுள்ளது. இதை நம்பி நெல், கரும்பு சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். ஏரியை சுற்றியுள்ள பகுதிகளில் கிணறு, ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது என்றனர்.

## மானாவாரி கடலை சாகுபடியாளருக்கு மானியத்தில் நல உதவிகள் பயன்பெற அழைப்பு

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் மானாவாரியில் கடலை விதைக்கும் கருவிக்கொண்டு விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு மானியத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளதால் இதில் விவசாயிகள் பங்கேற்று பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.அரியலூர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதற்கு தலைைமை வகித்த கலெக்டர் சரவணவேல்ராஜ் பேசியதாவது:இம் மாவட்டத்தில் இம்மாதம் வரை பெறப்பட்ட மழையை கொண்டு மானவாரிப் பயிர்களான கடலை, உளுந்து, மக்காசோளம், கம்பு மற்றும் சோளம் ஆகியவற்றை பயிரிட இதுவே ஏற்றத் தருணமாகும். மானாவாரியில் கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் கடலை விதைக்கும் கருவிக்கொண்டு கடலை மற்றும்

ஊடுபயிராக துவரை விதைப்பு செய்ய விதைப்பு மானியம் ரூ.ஆயிரம் எக்டருக்கு பின்னேற்பாக வழங்க தமிழக அரசு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்ட எண்ணெய் வித்து இயக்கத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் அரியலூர் மாவட்டத்திற்கு பொருள் இலக்கீடாக ஆயிரம் எக்டருக்கு, பின்னேற்பு மானியத்தொகையாக ரூ.10 லட்சம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இம்முறையில் கடலை விதைப்பு செய்யும் விவசாயிகள் தங்களின் நிலத்தின் சிட்டா, அடங்கல் மற்றும் கடலை விதைக்கும் போது எடுக்கப்படும் புகைப்படம் ஆகியவற்றுடன் பின்னேற்பு மானியத்தொகை பெறுவதற்கான உரிய படிவத்தில் பூர்த்திசெய்து தங்களது வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களிடம் அளித்து முன்னுரிமை அடிப்படையில் பயன்பெறலாம். மேலும், இந்த இலக்கீடானது அரியலூர் வட்டாரத்துக்கு 200 எக்டேரும், ஜெயங்கொண்டம் வட்டாரத்துக்கு 300 எக்டேரும், ஆண்டிமடம் வட்டாரத்துக்கு 300 எக்டேரும், தா.பழூர் வட்டாரத்துக்கு 200 எக்டேரும் வீதம் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது.

கடலை விதைக்கும் கருவிக்கொண்டு விதைப்புசெய்ய குறைவான நேரமே ஆகும். கூடிய ஆட்கள் தேவை மற்றும் செலவு குறைக்கப்படுகிறது. பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்படுகிறது. சரியான ஆழத்தில் விதைக்கப்படுவதால் நல்ல முளைப்பு திறனும், பயிர் போதுமான இடைவெளியுடன் இருக்கும். மேலும், களைமுளைப்புத் திறனும் குறைக்கப்படுகிறது. கைக்களை எடுப்பதில் சிரமம் ஏற்படுவதில்லை. எனவே இத்திட்டத்தில் அரியலூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் மற்றும் தா.பழூர் வட்டார விவசாயிகள் பங்கேற்று

பயன்பெற வேண்டும் என்றார்.கூட்டத்தில் டிஆர்ஓ ரவீந்திரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரஸ்வதி கணேசன், வேளாண் இணை இயக்குநர் (பொ) மனோகரன், தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் கணேசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**நல்ல மகசூலுக்கு விதை பரிசோதனை அவசியம்: வேளாண்துறை அட்வைஸ்**

சிவகங்கை, : நெல் பயிர்களில் நல்ல மகசூல் கிடைக்க விதை பரிசோதனை செய்ய வேண்டும் என விதை பரிசோதனை நிலையம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.விதை பரிசோதனை நிலையம் சார்பில் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதைகள் அனைத்தும் தரமான விதைகளாக இருக்க வேண்டும். தரமான விதைகளை கண்டறியவே பகுப்பாய்வு செய்யப்படுகிறது. தரமான விதைகளாக இருந்தால் மட்டுமே நாற்றுகள் நன்கு முளைத்து ஒரே சீரான வளர்ச்சி இருக்கும். நல்ல பயிர்களின் மூலம் அதிகமான மகசூல் எடுக்க முடியும்.

எனவே விவசாயிகள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் விதைகள் தரமானதாக உள்ளதா என உறுதி செய்ய கட்டாயம் விதை பரிசோதனை செய்ய வேண்டும். விதை பரிசோதனை செய்து அதன் பின்னரே விற்பனை செய்ய வேண்டியது அவசியமாகும். தற்போது நெல் விதைக்கும் பருவம் ஆரம்பம் ஆக இருப்பதால் தங்களிடம் உள்ள விதையில் 50கிராம் மாதிரி எடுத்து சிவகங்கை விதை பரிசோதனை நிலையத்தில் ஆய்வு செய்து கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாவட்டத்தில் பரவலாக மழை பெனுகொண்டாபுரத்தில் 42 மில்லி மீட்டர் பதிவு**

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் வெயில் வாட்டி வதைத்தது. இதனால் பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள், பொதுமக்கள் தவிப்பிற்குள்ளாகினர். மேலும் இளநீர், குளிர்பானக்கடைகளில் கூட்டம் காணப்பட்டது. இந்நிலையில் இரவு 10.30 மணியளவில் திடீரென இடி, மின்னலுடன் கன மழை பெய்தது. இதனால் சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வாகன ஓட்டிகள் சிரமத்துடன் இயக்கி சென்றனர். கால்வாயில் இருந்து வெளியேறிய கழிவு நீர் தெருக்களில் தேங்கியது. குறிப்பாக கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளி, பெனுகொண்டாபுரம், ஊத்தங்கரை சுற்றுவட்டார பகுதியில் நல்ல மழை பெய்தது. இந்த திடீர் மழையால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பெனுகொண்டாபுரம் பகுதியில் கன மழை கொட்டி தீர்த்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்) வருமாறு: பெனுகொண்டாபுரம் 42, ஊத்தங்கரை 36.2, போச்சம்பள்ளி 10, கிருஷ்ணகிரி 8.2, ஓசூர் 8, பாரூர் 6.2, நெடுங்கல் 5.4, சூளகிரி 4, தேன்கனிக்கோட்டை 3, மொத்தம் 123 மில்லி மீட்டர் மழை பதிவானது. சராசரியாக மாவட்டம் முழுவதும் 10.25 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

**விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கல்**

கொள்ளிடம் : நாகை மாவட்டம், கொள்ளிடம் அருகே உள்ள அளக்குடி கிராமத்தில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழக வேளாண் புல இறுதியாண்டு படிக்கும் குழு எண் 48ஐ சேர்ந்த மாணவிகள் சார்பில் இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி மற்றும் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கும் விழா நடைபெற்றது. ஊராட்சி

தலைவர் கலியமூர்த்தி தலைமை வகித்தார். மாணவிகளின் குழுத்தலைவி உஷா வரவேற்றார். ஊராட்சி துணை தலைவர் திருவரசன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் இளங்கோவன், விவசாயி திருமாவளவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு பல வகையான மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. ஊராட்சி தலைவர் கலியமூர்த்தி, அளக்குடி வள்ளலார் கோயில் வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். இதேபோல் பள்ளி, கோயில் வளாகங்களிலும், பொது இடங்களிலும் மா, பலா, வேம்பு, தேக்கு உள்ளிட்ட மரக்கன்றுகளை வேளாண் மாணவிகள் நட்டனர். மாணவி வானதி நன்றி கூறினார்.

## கோவை மாவட்டத்தில் 2.45 லட்சம் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

கோவை : கோவை மாவட்டத்தில் கோமாரி நோய் பரவலை தடுக்க 2.45 லட்சம் மாடுகளுக்கு வரும் செப்டம்பர் 1ம் தேதி முதல் கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது. தமிழகத்தில் மாடுகளுக்கு கோமாரி நோய் பரவலை தடுக்க வரும் செப்டம்பர் 1ம் தேதி முதல் 9வது சுற்று தடுப்பூசி முகாம் நடக்கிறது. கோமாரி நோய் என்பது கால்நடைகளை தாக்கி கொப்பளங்களை ஏற்படுத்தும் நச்சுயிரி தொற்றாகும். இந்நோய் வாயிலும் குளம்புகளுக்கு இடையிலும் கொப்பளங்களை உண்டாக்கி பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால், பால் உற்பத்தி பாதிப்பு, கன்றுகள் இறப்பு மற்றும் இனவிருத்தி பாதிப்பு ஏற்பட்டது. இதை தடுக்க தடுப்பூசி போடும் பணி, கடும்கண்காணிப்பு, வர்த்தக தடை மற்றும் கால்நடைகளை தனியே பிரித்து வைத்தல் உள்ளிட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், நோயை கட்டுப்படுத்த மத்திய அரசின் உதவியுடன் மாநிலம் முழுவதும் 8 சுற்று கோமாரி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதை தொடர்ந்து செப்டம்பர் மாதம் முதல் 9வது சுற்று கோமாரி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி, கோவை மாவட்டத்தில் உள்ள 2 லட்சத்து 45 ஆயிரத்து 775 மாடுகளுக்கு தடுப்பூசிகள் வரும் செப்டம்பர் 1ம் தேதி முதல் 22ம் தேதி வரை போடப்படவுள்ளது. இதில், விடுப்படும் மாடுகளுக்கு 23ம் தேதி முதல் 30ம் தேதி வரை சிறப்பு முகாம்கள் மூலம் தடுப்பூசி போடப்படவுள்ளது. இது குறித்து கால்நடைப்பராமரிப்பு துறை அதிகாரி ஒருவர் கூறுகையில் ''கோவை மாவட்டத்தில் செப்டம்பர் 1ம் தேதி முதல் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடக்கிறது. இந்த 9வது சுற்று முகாமில் நூறு சதவீத மாடுகளுக்கு தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது,'' என்றார்.

**சென்னை: டெல்டா மாவட்டங்களில் சம்பா நெல் சாகுபடியினைமுழுவீச்சில் மேற்கொள்வதற்கு தேவைப்படும் விதை, உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் விவசாயிகளுக்குதங்குதடையின்றி விநியோகம் செய்திட அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தி அமைச்சர் வைத்திலிங்கம் அறிவுரை வழங்கினார்.**




சென்னை: டெல்டா மாவட்டங்களில் சம்பா நெல் சாகுபடியினைமுழுவீச்சில் மேற்கொள்வதற்கு தேவைப்படும் விதை, உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் விவசாயிகளுக்குதங்குதடையின்றி விநியோகம் செய்திட அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தி அமைச்சர் வைத்திலிங்கம் அறிவுரை வழங்கினார்.

வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் வைத்திலிங்கம் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் செயலாக்கம் குறித்து கடந்த 10ம்தேதி வேளாண்மைஇயக்குநரகத்தில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக்கூட்டத்தில் வேளாண்மைத் துறை உற்பத்திஆணையர் மற்றும் அரசுச் செயலர் . ராஜேஷ் லக்கானி, வேளாண்மைத்துறை இயக்குநர் முனைவர் மு. ராஜேந்திரன், தோட்டக்கலைத் துறை மற்றும்மலைப்`பயிர்கள் துறை இயக்குநர்.லி. சித்திரசேனன், கூடுதல்வேளாண்மை இயக்குநர் சு.செந்தாமரை, மாவட்ட வேளாண்மைஇணை இயக்குநர்கள், கூடுதல் தோட்டக்கலை இயக்குநர், தோட்டக்கலைஇணை இயக்குநர்கள் , மாவட்ட தோட்டக்கலை துணை

இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை, தோட்டக்கலை இயக்குநரக அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

காவிரி பாசன பகுதிகளில் சம்பா நெல் சாகுபடி மேற்கொள்வதற்குமேட்டூர் அணை 9.8.2015 அன்று பாசனத்திற்காக திறந்துவிடப்பட்டது. இதன்தொடர்ச்சியாக டெல்டா மாவட்டங்களில் சம்பா நெல் சாகுபடியினைமுழுவீச்சில் மேற்கொள்வதற்கு தேவைப்படும் விதை, உரங்கள், நுண்ணூட்டஉரங்கள் தேவையான அளவு இருப்பு வைத்து விவசாயிகளுக்குதங்குதடையின்றி விநியோகம் செய்திட தக்க நடவடிக்கையினைமேற்கொள்ளும்படி அறிவுரை வழங்கினார்.மேலும் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களானமண்வள அட்டை இயக்கம் , டெல்டா மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் , மாநில திட்டங்களான தமிழ்நாடு பருத்திசாகுபடி இயக்கம் ஆகிய திட்டங்களின் செயலாக்கம் குறித்து ஆய்வுமேற்கொண்டார்.

இத்துடன் மத்திய மற்றும் மாநில அரசுகள் பங்கேற்கும்திட்டங்களான தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம், தேசிய உணவுபாதுகாப்புத் திட்டம், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய் பனைக்கான தேசிய இயக்கம் , எலிஒழிப்பு முகாம் , வேளாண்மை விரிவாக்கத்திற்கான தேசிய இயக்கம் , விதைமற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம் , தென்னை வளர்ச்சிவாரிய திட்டங்கள் மற்றும் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் ஆகியதிட்டங்களின் செயலாக்கம் குறித்து மாவட்ட வேளாண்மை இணைஇயக்குநர்களிடம் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

தோட்டக்கலைத் துறை தொடர்பாக அரசு தோட்டக்கலைப் பண்ணைமற்றும் பூங்காக்கள், பசுமை குடில் மற்றும் நிழல் வலை குடில்

அமைத்தல்திட்டம் குறித்தும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொய் மலர்களுக்கெனதனியாக உருவாக்கப்பட்டு வரும் மகத்துவ மைய செயல்பாடு, திண்டுக்கல்மாவட்டத்தில் ரெட்டியார்சத்திரத்தில் உருவாக்கப்பட்டு வரும் காய்கறிபயிர்களுக்கான மகத்துவ மைய செயல்பாட்டினையும் ஆய்வு செய்துஇப்பணிகளை துரிதமாக முடித்து விவசாயிகள் பயன்பாட்டிற்கு கொண்டுவரஅறிவுரை வழங்கினார்.

சொட்டுநீர் பாசனம் உள்ளிட்ட பல்வேறு தோட்டக்கலை பணிகளைவிரைந்து முடித்திடவும் , பயிர்காப்பீடு திட்டத்தில் வாழை சாகுபடியாளர்களைபங்கேற்று பயன்பெற செய்யும்படி அறிவுரை வழங்கினார்.மேலும் திட்டத்திற்கான இடுபொருட்களை உரிய காலத்தில் இருப்புவைத்து விவசாயிகளுக்கு திட்ட பயன்கள் விரைவாக சென்றடைய உரியநடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அமைச்சர் வைத்திலிங்கம் மாவட்டவேளாண்மை இணை இயக்குநர்களுக்கும் மற்றும் மாவட்ட தோட்டக்கலைதுணை இயக்குநர்களுக்கும் அறிவுரை வழங்கினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**ரசாயனம் மட்டுமல்ல உரம்_**



***ரசாயன உரங்களில் உணவுப் பொருட்களில் நச்சுக்களின் எச்சங்கள் விரவிக் கிடக்கின்றன***

முதன் முதலாக ரசாயன உரங்கள் அறிமுகப் படுத்தப்பட்டபோது விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். தொழு உரம், தழையுரம், சாண உரம் என்று தேடியலைய வேண்டியதில்லை. காசைக் கொடுத்தால் விதவிதமான ரசாயன உர மூட்டைகள் வீட்டில் வந்து இறங்கிவிடும். எந்தப் பயிருக்கு, எந்த உரத்தை எவ்வளவு இட வேண்டும்

என்பதையெல்லாம் விவசாயிகளுக்குப் பாடம் நடத்தின உர நிறுவனங்கள். முதல் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு விளைச்சல் அபரிமிதமாகத்தான் இருந்தது. மேலும் மேலும் அதிக அளவில் ரசாயன உரங்களைப் போட்டால் இன்னும் அதிக அளவில் விளைச்சல் வருமென்று எண்ணிக் கடன்பட்டுக்கூட ரசாயன உரங்களை வாங்கி வயல்களில் கொட்டினார்கள். அடுத்து விளைச்சல் படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது. மண்ணின் இயற்கை வளம் குறைந்துபோயிற்று. வயலில் போட்ட முதலைக்கூட மீட்க முடியாமல் விவசாயிகள் இழப்புக்கு ஆளானார்கள். உலகம் முழுவதிலும் இதே மாதிரியான பிரச்சினைகள் தலைதூக்கின.

**இயற்கை உரங்களின் நன்மைகள்**

உலகெங்கிலும் உள்ள விவசாய விஞ்ஞானிகள் செயற்கையான ரசாயன உரங்களால் ஏற்பட்ட விளைவுகளைத் தீவிரமாக ஆராயத் தொடங்கினார்கள். பிரான்ஸில் உள்ள இன்செர்ம் எனும் உடல் நல மருத்துவ ஆய்வு நிலையம் தொழு உரம், இலையுரம் போன்ற இயற்கையான நைட்ரஜன் அடங்கிய உரங்களைப் பயிர்களுக்கு வழங்குவதால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிடுகிறது. லெட்டூஸ் செடிகளுக்கு இயற்கை உரங்களை இடும்போது அவற்றின் எடை, விளைச்சலின் அளவு மற்றும் புரத உள்ளடக்கம் ஆகியவை குறைவதில்லை. ஆனால், அவற்றில் தீமை செய்கிற நைட்ரேட் எச்சங்களின் அளவு மிகவும் குறைந்துவிடுகிறது. இதற்கு மாறாக, செயற்கை ரசாயன உரங்கள் ஊட்டி வளர்க்கப்பட்ட லெட்டூஸ் இலைகளில் உட்கவரப்படாத நைட்ரேட் சத்துகள் அதிக அளவில் போய்த் தேங்கிவிடுகின்றன.

பிரான்ஸ் ஆய்வர்கள் ஆமணக்குப் பிண்ணாக்கை ஒரு பாத்தியில் உள்ள லெட்டூஸ் செடிகளுக்கு இட்டார்கள். அதே அளவான இன்னொரு

பாத்தியிலுள்ள செடிகளுக்கு அதே அளவு நைட்ரஜன் சத்தைத் தருகிற அளவிலான அம்மோனியம் நைட்ரேட், சோடியம் நைட்ரேட் ஆகிய ரசாயன உரங்களைப் போட்டார்கள். இயற்கை உரத்தை உண்டு வளர்ந்த செடிகளில் இருந்ததைவிட இரண்டு மூன்று மடங்கு அதிகமான நைட்ரேட் எச்சங்கள் செயற்கை உரமிடப்பட்ட செடிகளின் இலைகளில் காணப்பட்டன.

**குடிநீரில் நைட்ரேட் நச்சு**

வயல்களில் தூவப்படும் ரசாயன உரங்களின் கணிசமான விகிதம் பாசன நீரில் கரைந்து அடித்துச் செல்லப்பட்டு வெளியேறி, நிலத்தடி நீரிலும் அருகிலுள்ள நீர் நிலைகளிலும் போய்ச் சேர்ந்துவிடுகிறது. இதன் காரணமாக அவற்றில் நைட்ரேட் செறிவு பாதுகாப்பான அளவைவிடக் கூடுதலாகிவிடுகிறது. பிரான்ஸின் குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்புத் துறை அதிகாரிகளுக்கு இது ஒரு பெரிய பிரச்சினை. எந்த ஒரு ஊரிலிருந்தும் குடிநீரில் நைட்ரேட் நச்சு அளவுக்கு மீறிப் போய்விட்டதாக நுகர்வோர் அமைப்புகளும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் வழக்குத் தொடர ஆயத்தமாக இருக்கிறார்கள். எனவே, அரசு அதிகாரிகள் எந்த நேரமும் விழிப்புடன் இருக்க வேண்டியுள்ளது.

நீர்நிலைகளில் ரசாயனங்கள் கலப்பது நீரை மாசுபடுத்தி, அதில் வாழும் உயிரினங்களுக்கும் சுவாசிக்கத் தேவையான ஆக்சிஜனின் செறிவையும் குறைத்துவிடுகிறது. நீர்த்தாவரங்களும் மீன்களும் இதனால் பாதிக்கப்படுகின்றன. அந்த நீரைப் பருகும் குழந்தைகளுக்கு ஆக்சிஜன் பற்றாக்குறையால் உண்டாகும் நீலநிறக் குழந்தை நோய் மற்றும் ரத்த சோகைக் கோளாறுகள் தோன்றுகின்றன.

ரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் ஆக்சிஜனை உட்கவர்ந்துகொண்டு அதை உடலின் பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச்சென்று விநியோகிக்கிறது. ரத்தத்தில் நைட்ரேட்டுகள் புகுந்துவிட்டால் ஹீமோகு

ளோபின் மெட்ஹீமோகுளோபினாக மாற்றப்படும். அதற்கு ஆக்சிஜனுடன் இணைகிற திறன் இராது. எனவே, உடலுக்குள் ஆக்சிஜன் விநியோகம் பாதிக்கப்பட்டு, உறுப்புகளுக்குத் தேவையான ஆக்சிஜன் கிடைக்காமல் போகும்.

**நீலநிற ரத்தம்**

நல்ல ரத்தமுள்ள குழந்தைகள் ரோஜா நிற உடலுடன் இருக்கும். மெட்ஹீமோகுளோபின் ரத்தத்தில் அதிகமாகிப்போனால், அவை நீல நிறமுள்ளதாகிவிடும். இதயம் சரியாகச் செயல்படாதபோதும் இதே போன்ற கோளாறு ஏற்படும். நைட்ரேட்டுகள் ஜீரண மண்டலத்தில் புகுமானால், அவை நைட்ரோசமைன்கள் என்ற கூட்டுப்பொருளாக மாறும். அது உடலில் புற்றுநோயை உண்டாக்கக்கூடும். ஐரோப்பிய பொதுச்சந்தை அமைப்பு, குடிநீரில் லிட்டருக்கு 50 மில்லி கிராமுக்கு மேல் நைட்ரேட்டுகள் இருக்கக் கூடாது என்று விதித்திருக்கிறது. பிரிட்டனில் இந்த உச்சவரம்பு 100 மில்லி கிராமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வயலுக்கு இடப்படும் நைட்ரேட் உரத்தில் எவ்வளவு விகிதம் தாவரங்களால் உட்கவரப்படுகிறது, அது எந்த வகையில் உட்கவரப்படுகிறது, மீதமுள்ள விகிதம் என்னவாகிறது, அது நீர்நிலைகளிலும் நிலத்தடி நீரிலும் எந்த அளவில், எவ்வாறான காரணிகளின் பங்களிப்புடன் கலக்கிறது, நைட்ரேட்டுகள் விஷமற்ற கூறுகளாகச் சிதைய எவ்வளவு காலம் பிடிக்கிறது என்பன போன்ற பல விஷயங்கள் இன்னமும் உறுதியாக விளங்கிக்கொள்ளப்படவில்லை. நைட்ரஜன் சுழல் என்ற தாவரவியல் நிகழ்வும் முழுமையாகப் புரிந்துகொள்ளப்படவில்லை.

தாவரவியல் முறையில் நைட்ரஜனை உட்கவர்கிற பயறு, உளுந்து, மொச்சை போன்ற இரு வித்திலைப் பயிர்கள் காற்றிலுள்ள நைட்ரஜனை உட்கவர்ந்து, தமது வேர் முடிச்சுகளில் சேமிக்கின்றன. மண்ணில்

நைட்ரஜன் சத்தைக் கூட்டுவதில் இது மற்றெல்லா முறைகளையும் விடப் பத்திரமானது. ஆனால், விவசாயிகளுக்கு ரசாயன உரங்களைத் தூவுவதுதான் சுலபமாகத் தோன்றுகிறது. பிரான்ஸ் ஆய்வகம் சம அளவிலான ஆறு பாத்திகளில் வெவ்வேறு ரசாயன உரங்களையும், ஆமணக்குப் பிண்ணாக்கு போன்ற இயற்கை உரங்களையும் இட்டு லெட்டூஸ்களை வளர்த்தது. ஏழாவதாக ஒரு பாத்தியில், எந்த உரமும் இடாமல் லெட்டூஸ் வளர்க்கப்பட்டது.

எல்லாப் பாத்திகளிலும் அறுவடைக்குப் பின் விளைச்சல் அளவு, பயிரில் புரதச் சத்து அளவு, கனிமச் சத்துகளின் அளவு மற்றும் வகைகள், உருளை வடிவத்தில் கிடைத்த லெட்டூஸ்களின் எண்ணிக்கை, பயன்படாத சக்கைப் பகுதியின் அளவு போன்ற அம்சங்கள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்தன. ஆனால், செடிகளில் நைட்ரேட் எச்சங்களின் அளவு குறிப்பிடத்தக்க வகையில் வேறுபட்டன. உரமிடப்படாத செடிகளில் மில்லியனில் 159 பங்கு என்ற அளவில் நைட்ரேட்டுகள் இருந்தன.

ஹெக்டேருக்கு 120 கிலோ அளவில் பிண்ணாக்கு ஊட்டப்பட்ட லெட்டூஸ்களில் மில்லியனுக்கு 319 பங்கு என்ற அளவிலும் ஹெக்டேருக்கு 200 கிலோ அளவில் பிண்ணாக்கு ஊட்டப்பட்ட லெட்டூஸ்களில் மில்லியனுக்கு 217 பங்கு என்ற அளவிலும் நைட்ரேட்டுகள் தென்பட்டன.

அம்மோனியம் நைட்ரேட் குறைவாகப் போடப்பட்ட லெட்டூஸ்களில் நைட்ரேட் அளவு மில்லியனுக்கு 534 பங்கு என்ற அளவிலும் உரம் அதிகமாகப் போடப்பட்ட லெட்டூஸ்களில் மில்லியனுக்கு 802 பங்கு என்ற அளவிலும் இருந்தது. சோடியம் நைட்ரேட்டைக் குறைவாகப் போட்ட பாத்திகளில் விளைந்த லெட்டூஸ்களில் நைட்ரேட் அளவு மில்லியனுக்கு 698 பங்காகவும், அதிகமாகப் போடப்பட்ட பாத்திகளில் விளைந்த லெட்டூஸ்களில் 991 பங்காகவும் இருந்தது.

இவ்வாறு இயற்கை உரங்களைப் பயன்படுத்தினால் விளைச்சல் குறைந்துவிடாது; பயிர்களில் நச்சுக் கூட்டுப்பொருள்களின் அளவும் குறைவாக உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.